# தலைமுறைக்கும் தமிழ்!

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்



# ஆண்டு விழா மலர்

டிசம்பர் 10-11, 2022

# அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

# ஆண்டு விழா!

# தலைமுறைக்கும் தமிழ்!

டிசம்பர் – 10–11, 2022, சனி மற்றும் ஞாயிறு

காலை 10:00 மணி முதல் பிற்பகல் 2:45 மணி வரை, கிழக்கு நேரம்

## சிறப்பு நகழ்ச்சிகள்

அறிஞர் பெருமக்களின் சிறப்புரை

நெடுநாள் ஆசிரியர் விருது

ஆண்டு விழா மலர்

## போட்டி விவரங்கள்

மாறுவேடப் போட்டி

சுட்டிகளின் குட்டிக் கதை

செய்யுள் போட்டி

பேச்சுப் போட்டி

கவிதைப் போட்டி

## சிறப்பு விருந்தினர்கள்



உதவி பேராசிரியர்.

**டைலர் ரிச்சர்ட்**

ஆஸ்டினில் உள்ள

டெக்சாஸ் பல்கலைக்கழகம்,



முனைவர்.

**கான்ஸ்டன்டைன் நக்காஸிஸ்**

மானுடவியல் துறை

சிகாகோப் பல்கலைக்கழகம்



பேராசிரியர்.

**மு. இராமச்சந்திரன்**

பட்டிமன்றப் பேச்சாளர்

## Editorial

Tamil Content Pending

## Table of Contents

Tamil Text content Pending

# Chief Editor’s Note—Content Pending

# President  Note—Content Pending

# 2022-2023 Governing Council

## Executive Committee



**Dhinakar Karuppuchamy**
President
Concord, NC



**Srinivas Prabakar**
Vice President
Dallas, TX



**Raveendran Krishnasamy**
Treasurer
Lexington, SC

**Karthikeyan Angamuthu**
Secretary,
Richmond, VA



**Suganthi Govind**
Joint Secretary,
Round Rock, TX



**Chandrakumar Periaswamy**
Joint Treasurer
Naperville, IL



**Subha Karaikudi**
Director,
Edison, NJ



**Karu Manikavasakam**
Director,
Houston, TX



**Robin Santhosh**
Director
Richmond, VA

## Advisory Board

Advisory Board Picture Not Available

**Balakrishnan IAS**

**Dr. Ravishankar Kannabiran**

**Dr. RC. Saravanabavan**

**Dr. Arasu Chelliah**

# Governing Councils Since 2010

## 2010 ATA organizing team

A three-member team was formed with unanimous consent during the first meeting organized on April 3rd, 2010 at Ellicott city, Maryland. This team was entrusted with the responsibility to organize :

1) Printing Tamil textbooks
2) come up with a bylaw
3) Incorporate ATA in Maryland
4) Arrange future meetings
5) Other activities relevant to ATA

Several members of the 2011-2013 GC members started volunteering for the above-mentioned responsibilities since April 2010 itself

**President** Dr. Arasu Chellaiah

**Secretary** Dr. Ramachandran Sivakumar

**Treasurer** Dr. Ravi Palaniappan

## 2011 - 2013 Governing Council

**Executive Committee**

| | |
|---|---|
| President | Arasu Chellaiah |
| Vice President | Sivanandam Mariyappan |
| Secretary | Porchezhian Ramasamy |
| Joint Secretary | Boopathi Samikkannu |
| Treasurer | Ravi Palaniappan |
| Joint Treasurer | Manimegalai Ezhilarasan |

**Board of Directors**

| | |
|---|---|
| Ramachandran Sivakumar | Sendhil Cheran |
| Sornam Sankar | Karu Manickavasakam |
| Soundarapandian Jeyabal | Ravikumar Shanmugam |
| Ramasamy Somasundaram | Geetha Mariappan |
| Vasu Renganathan | |

## 2014 - 2015Governing Council

**Executive Committee**

| | |
|---|---|
| President | Sivanandam Mariyappan |
| Vice President | Manivannan Periyakaruppan |
| Secretary | Boopathi Samikkannu |
| Joint Secretary | Vivekanandan Natarajan |
| Treasurer | Megalai Ezhilarasan |
| Joint Treasurer | Visalashhi Velu |

**Board of Directors**

| | |
|---|---|
| Arasu Chellaiah | Selvaraj |
| Sivakumar Ramachandran | Palanisamy |
| Porchezhian Ramaswamy | Anandhi Santhosh |
| Ravikumar Shunmugam | Elango Thirupathi |
| Ramasamy Somasundaram | |

## 2016 - 2017 Governing Council

### Executive Committee

| | |
|---|---|
| President | Sivakumar Ramachandran |
| Vice President | Ravikumar Shanmugam |
| Vice President | Manimegalai Ezhilarasan |
| Secretary | Soundar Jeyabal |
| Joint Secretary | Elango Thirupathy |
| Treasurer | Ramasamy Somasundaram |
| Joint Treasurer | Muni Kandasamy |

Previous GC members were included in the expanded team of Directors for 2016-2017 term only

### Board of Directors

| | |
|---|---|
| Arasu Chellaiah | Anandhi Santhosh |
| Boopathi Samikkannu | Geetha Sharan |
| Mani Periakaruppan | Karu Manickavasakam |
| Palanisamy Subramaniam | Ravi Palaniappan |
| Porchezhian Ramasamy | Selvaraj R |
| Sivanandam Mariyappan | Senthil Cheran |
| Vivekanandan Natarajan | Sornam Sankar |
| Visalakshi Velu | Vasu Renganathan |

## 2018 - 2019 Governing Council

### Executive Committee

| | |
|---|---|
| President | Megalai Ezhilarasan |
| Vice President | Karu Manickavasakam |
| Secretary | Elango Thirupathy |
| Joint Secretary | Arasu Chellaiah |
| Treasurer | Boopathi Samikkannu |
| Joint Treasurer | Geetha Saravanarajan |

### Board of Directors

| | |
|---|---|
| Sivakumar Ramachandran | Baskar Vyapuri |
| Vasu Renganathan | Porchezhian Ramasamy |
| Manivannan Periyakaruppan | Kabilan Kumarasamy |
| Visalakshi Velu | Dhinakar Karuppusamy |
| Ramasamy Somasundaram | |

## 2020 - 2021 Governing Council

### Executive Committee

| | |
|---|---|
| President | Karu Manickavasakam |
| Vice President | Dhinakar Karuppuchamy |
| Secretary | Baskar Vaiyapuri |
| Joint Secretary | Narmada Krishnaswamy |
| Treasurer | Sudhagar Krishnamoorthy |
| Joint Treasurer | Shalini Rammohan |

### Board of Directors

| | |
|---|---|
| Surya Nagappan | Kathiravan Periasamy |
| Karthikeyan Angamuthu | Suganthi Govind |
| Arun Prasad Venkatesan | Srinivas Prabakar |
| Kamal Govindasamy | Raveendran Krishnasamy |
| Rajasekaran Namakkal Soorappan | |

## 2022 - 2023 Governing Council

### Executive Committee

| | |
|---|---|
| President | Dhinakar Karuppuchamy |
| Vice President | Srinivas Prabakar |
| Secretary | Karthikeyan Angamuthu |
| Joint Secretary | Deivasuganthi Ramalingam |
| Treasurer | Raveendran Krishnasamy |
| Joint Treasurer | Chandrakumar Periasamy |

### Board of Directors

Subha Karaikudi

Karu Manickavasagam

Shalini Rammohan

# ஆத்திசூடி அருந்தமிழ்ப் பள்ளி ராச்சஸ்டர், நியூயார்க்



### நிர்வாகக் குழு

தலைவர் ப்ரமோத் குமார்
ஒருங்கிணைப்பாளர் தேனு சுப்பையா
உறுப்பினர் ஜினியா ப்ரின்ஸ் ஜெரால்டு
உறுப்பினர் கவிதா தினேஷ்
உறுப்பினர் ஜனனி தயாரூபன்



### ஆசிரியர்கள்

லாவண்யா ரமேஷ் முன் மழலை
வசுமதி விஜயகுமாரன் மழலை
கோமதி ராமகிருஷ்ணா நிலை 1
கவிதா தினேஷ் நிலை 2
நர்மதா பாரதிராஜன் நிலை 3
பாரதிராஜன் தாமோதரன் நிலை 4
அருணா மணிகண்டன் நிலை 5
ஜினியா பிரின்ஸ் ஜெரால்டு நிலை 5
நாச்சம்மை சுந்தரம் நிலை 6
புவனேஸ்வரி குருஷேவ் நிலை 7
மெர்லின் ஜார்ஜ் சிறப்புக் கல்வி

### மாற்று ஆசிரியர்கள்

வின்னி டென்னிஸ்
ஜனனி தயாரூபன்
அனுராதா
குமார் தினேஷ்
ப்ரியா மதன்
ஸ்வப்னா பாலகிருஷ்ணன்
மோஹனா நவீன்

# இதுவரை....(அ.த.க.2022)

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகத்தின் 2022 ஆண்டிற்கான செயல்பாடுகள்...

கடந்த 2021 ஆண்டின் ஆண்டு விழா மிகச் சிறப்பாக மெய்நிகர் விழாவாக நிகழ்ந்தேறியது. தமிழறிஞர்கள் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்தனர். ஆண்டு விழாவில் மாணாக்கர்கள் தம் பல்வேறு திறன்களை, கலை நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்தினர். விழாவினை ஒட்டி ஆண்டு விழா மலர் வெளியிடப்பட்டது.

இதில் பாடத்திட்டங்கள் வடிவமைத்த ஆசிரிய குழுவினரும் கலந்துரையாடினர். அ.த,க விற்கெனத் தனி அடையாளங்கள்(branding) வடிவமைப்பது, அ.த.க.வின் புத்தகங்களைத் தனித் தன்மையுடன் அறிவியல்பூர்வமாக வடிவமைப்பது, அ.த.க.வின் மென்பொருள் மேன்படுத்துவது, போன்றவைகள் அலசி ஆராயப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளுக்கான எதிர்கால இலக்குகளை கண்டடைந்தது சிறப்பாக அமைந்தது.




2022 இந்த ஆண்டிற்கான புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

FeTNA மற்றும் ATA இணைந்து நிகழ்த்திய புத்தகத் திறனாய்வில் திருமிகு **பாலகிருஷ்ணன்** இ.ஆ.ப. அவர்கள் எழுதிய Journey Of Civilization என்ற நூல் திறனாய்வு செய்யப்பட்டது. அந்நிகழ்வில் பங்காற்றிய மாணாக்கர்களுக்கு சான்றிதழ் ஜூலையில் நியூயார்க் மாநகரில் நிகழ்ந்த FeTNA விழாவில் வழங்கப்பட்டது.

ஜூலை மாத இறுதியில் இரண்டு நாட்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை வாஷிங்டன் டி.சி.யில் நிர்வாகக் குழுவினருக்கு அளிக்கப்பட்டது அதில். Maryland Non-Profit Organization அவர்களால் **Board Of Excellence** என்ற ஒரு பயிற்சியும் அதன் பின்னர் அ.த.க.வின் அடுத்த கட்ட எதிர்கால தொலைநோக்குப் பயணத் திட்டங்கள் – மைல்கற்கள் பற்றி திட்டமிடப்பட்டது. தற்பொழுது இருக்கும் அ.த,கவின் பாடநூல்களை எப்படி இன்னும் திறம்படப் பாடத் திட்டங்களை அமெரிக்க மண்ணில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கு உகந்தவாறு வடிவமைப்பது என அலசி ஆராயப்பட்டது. உலகின் வெவ்வேறு நாடுகளில் செயல்படும் கல்வி முறைகள் ஆராயப்பட்டது.

இந்த ஆண்டும் வழமையாக நிகழும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறையும் சிறப்பாக நிகழ்ந்தது. பல மாநிலங்களிலிருந்து ஆசிரியர்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

அ.த.கவின் பள்ளிகளுக்கு **Tamil Language Seal of Biliteracy & Foreign Language Credit** பயிற்சி அளிக்கப்பட்டது. பள்ளிகள் ஆர்வமாகப் பங்கேற்று பல ஐயங்களை வினவி, விடை கண்டடைந்து நடைமுறைப்படுத்தும் விதமாக பயிற்சி அமைந்தது மிகச் சிறப்பு.


கடந்த அக்டோபர் மாதத்தில் **Dr. Donald Davis, Director of South Asian Studies , University Of Texas, Austin** அவர்களின் தலைமையில் **ACTFL** என்ற அமைப்பிலிருந்து திருமிகு **Paul Sandrock** அவர்களால் அ.த.க.வின் பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

எதிர்வரும் டிசம்பர் 10 & 11,2022 ஆண்டு, அ.த,க. இவ்வாண்டிற்கான ஆண்டுவிழா மெய்நிகர் விழாவாகக் கொண்டாட இருக்கிறது.

# உலகத் தமிழ்க் களஞ்சியம்

தமிழுக்குப்பெரும் அணிகலனாக உலகத் தமிழ்க்களஞ்சியம் அண்மையில் உலகத்தரத்தில் வெளிவந்துள்ளது. தமிழ், தமிழ்நாடு, தமிழர் தொடர்பாக *16,500* செய்திளுடன், *2141* பக்கங்களில் *3* தொகுதிகளாக அமைந்துள்ள இக்களஞ்சியத்தைத் திட்டமிட்டு *12* ஆண்டுகள் உழைத்துத் தொகுத்தவர் அண்ணாநகரைச் சேர்ந்த பேராசிரியர் **டாக்டர் இ.ஜே.சுந்தர்.** பதிப்பித்தவர் மலேசியாவின் உமா பதிப்பக உரிமையாளர் **டத்தோ சோதிநாதன்,** இதற்கு சிறப்பு அறிவுரைஞராக*(special adviser)* அண்மையில் மறைந்த **டாக்டர் க.ப.அறவாணனும்** *(Manonmaniam Sundaranar University retd vice Chancellor)*, சீராளராக *(Editor)* **நலங்கிள்ளியும்** உள்ளனர். *50* அறிஞர்கள் இப்பணியில் பங்களிப்பு வழங்கியுள்ளனர். தமிழ் மொழி தொடர்பான இலக்கியம், இலக்கணம், வரலாறு, நாட்டியம், இசை, சமயம் முதலியன மட்டுமன்றித் தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் உள்ள இவை தொடர்பானவற்றையும் இதில் காணலாம். அமைப்புகள், சுற்றுலா, புவியியல், இதழ்கள், வேளாண்மை, விலங்கியல், விழாக்கள், பெருமக்கள், மருத்துவம், தொழிலகங்கள், திரை முதலிய *39* தலைப்புகளில் இவற்றைத் தேடுவது மட்டுமன்றி அகர வரிசையிலும் அனைத்தையும் தேடும் வண்ணம் அமைத்துள்ளது.

இதுவரை தமிழில் வந்த *800* இதழ்கள், *96* தமிழக ஆறுகள், *760* இலக்கியங்கள், , தமிழகத்தின் *600* ஊர்கள், *720* தமிழகத் தாவரங்கள், *230* விலங்குகள், பறவைகள், *145* தொழில் நிலையங்கள், *2016* வரை வந்த *4000* திரைப்படங்கள், தமிழகத்தின் அத்தனை திருத்தலங்கள், ஈழம் பற்றி முழுமையான பதிவுகள் என *100* நூல்களுக்கு இணையான செய்திகளை வழங்கும் ஒரே நூலகமாக இது விளங்குகிறது.




இதன் இந்திய விலை ரூ. *3000* என்பது இதன் தரத்திற்கும் அளவிற்கும் மிகக்குறைவே. இதன் இந்திய விற்பனை உரிமையாளர் ***Rythm book distributors***. மேலும் விவரங்களுக்குத் தொகுப்பாசிரியர் **டாக்டர் இ.ஜே.சுந்தருடன்** தொடர்பு கொள்ளலாம். **செல்பேசி: *9841068832***
**மின்னஞ்சல்: *ejsundar@gmail.com***

# இருவகை ஒலி மாற்றங்களும் வழக்காறும் செய்யுளாறும்



*தொல்காப்பியர் பல நூற்பாக்களில் செய்யுள் **வாசு அரங்கநாதனின்** நியூ செஞ்சுரி வெளியீடான '**"இக்காலத் தொல்காப்பிய மரபு"** என்னும் நூலிலிருந்து*

மற்றும் வழக்கு என்னும் இருவகை வழக்குகளைப் பிரித்தறிகிறார்.

எ.டு.

*இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை*
*வழக்காறு அல்ல செய்யுளாறே (கிளவியாக்கம் 18).*

செஞ்ஞாயிற்று நிலவு வேண்டினும் வெண்டிங்களுள் வெயில் வேண்டினும் என வரும் இடங்களில் ஞாயிறும் நிலவும் வேண்டும் எனக் கூறும் பெயர்க்கொடைப் பண்புகள் செய்யுளில்தான் வரும். உலக வழக்கில் வராது என்பதிலிருந்து, வழக்காறு என்பதையும் செய்யுளாறு என்பதையும் பிரித்தறிவதில் கவனம் தேவை. இவற்றைப் பேச்சுவழக்கு எனவும் செய்யுள் வழக்கு எனவும் பிரித்தறிதல் கூடாது. இங்கு வழக்காறு என்று சொல்வது பொதுவான உலகநடை என்றே கொள்ளவேண்டும். இது உரைநடையாகவும் இருக்கலாம் பேச்சு வழக்காகவும் இருக்கலாம்.

இங்ஙனமே 'முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே' (கிளவியாக்கம் 39) என்னும் நூற்பாவிலும் செய்யுள் என்பதைச் செய்யுள் பண்பு என்னும் கருத்தில் நோக்கவேண்டும். 'கண்டேன் கண்களால் கற்பினுக்கணியை' என்னும் வழக்கில் 'கண்டேன்' என்னும் வினையை முற்படக் கிளத்தல் செய்யுள் வழக்கே ஒழிய உலகவழக்கில் இவ்வாறு கூறுவதில்லை என்றே தொல்காப்பியர் கூறுகிறார். இவற்றினின்று "செய்யுள் மற்றும் வழக்கு" என்று தொல்காப்பியர் கூறுவது "செய்யுள் மற்றும் செய்யுள் அல்லாத பொது வழக்கு" என்றே அறியவேண்டியிருக்கிறது. பேச்சு வழக்கு பற்றித் தொல்காப்பியர் நூற்பாக்கள் எழுதியிருந்தாரானால் உ > ஒ, இ > எ, த்த் > ச்ச், ய்ச்ச் > ச்ச். ந்த் > ஞ்ச் போன்ற பேச்சு வழக்கு ஒலியன் மாற்றங்களுக்கு அவர் நூற்பாக்கள் எழுதியிருக்கவேண்டும். குடை > கொடெ, படித்தேன் > படிச்சேன், காய்ச்சினேன் > காச்சினேன், தெரிந்தது > தெரிஞ்சிது போன்ற இலக்கிய வழக்கிலிருந்து பேச்சுதமிழ் அல்லது வட்டார வழக்குக்கு மாறும் ஒலியன் மாற்றங்களுக்குக் குறிப்பாக தொல்காப்பிய நூற்பாக்களில் எதையும் சுட்டிக்காட்டமுடியவில்லை. மேலும் ல் > ற் (பற்பொடி), ள் > ட் (நாட்காட்டி) போன்ற பல மாற்றங்களுக்குத் தொல்காப்பியத்தில் நூற்பாக்களைக் காண்கிறோம். இந்தப் புணரியல் விதிகள் பெரும்பாலும் உரைநடை வழக்கையே வெளிக்கொணர்கின்றன. இவை பேச்சுவழக்குச் சொற்கள் என்று கூறமுடியாது.

ஒலி மாற்றங்கள் பற்றித் தொல்காப்பியர் கூறும் நூற்பாக்களை ஊர்ந்து நோக்க இப்படம் உதவியாக இருக்கும். 'உந்தி முதலா முந்துவளித் தோன்றி...' என விளக்கும் தொல்காப்பியர் நூற்பாவின் வழி ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும்போது அவை உந்தியிலிருந்து பிறந்து வளி வழி வந்து தலைப் பகுதிக்கடியில் இருக்கும் வாயில் பல்வேறு வகையில் மொழியின் ஒலியாக வருகிறது என்கிறார் தொல்காப்பியர். பின்வரும் நூற்பாக்களில் தொல்காப்பியர் எந்த ஒலி எந்த ஒலியை மாற்றும் வகையில் வரும் என்பதும் அவை இலக்கிய வழக்கினுள்ளே மட்டும் வருகிறது என்பதை அறியலாம்.

*கசதப முதலிய மொழிமேல் தோன்றும்*
*மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்*
*ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே*
*அன்ன மரபின் மொழிவயி னான (எழுத்து, தொகை மரபு 1).*

கசதப வுக்கு முன்னால் வரும் மெல்லெழுத்துகள் ங்க, ஞ்ச, ந்த, ம்ப என இயைந்து வரும் என்னும் கருத்தை படம் 2.1ல் இவ்வொலிகள் ஒலிக்கப்படும் இடங்களுக்கு இயைந்து வருவதை நோக்கலாம். 'தேங்காய்', 'மரஞ்செடி', 'பழந்தோல்', 'விளம்பூ' போன்ற எடுத்துக்காட்டுகளில் தேம்+காய் >தேங்காய், மரம்+செடி>மரஞ்செடி, பழம்+தோல்>பழந்தோல், விளம்+பூ>விளம்பூ என ம் வருமொழி வெடிப்பொலிக்கேற்றவாறு ஒருநிலைப்பட்டு மாறுகிறது.

*லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்*
*த ந எனவரிற் றனவா கும்மே (எழுத்து, தொகை மரபு 7)*

நூல் + தகுதி > நூற்தகுதி (ல் முன் த வரின் றவாகும்) என மாறுவதையும் என் + நோக்கம் > என்னோக்கம் (ன் முன் ந வரின் னவாகும்) என மாறுவதையும் இந்நூற்பா விளக்குகிறது. இம்மாற்றங்களைப் படம் 1ல் அவை உச்சரிக்கும் இடங்களை நோக்கும்போது த/ந ஆகியவற்றை பல்லொலிகள் (dental) எனவும் ல/ன வை பின்பல்லொலிகள் (alveolar) எனவும் இரு வேறு இடங்களிலும் ள/ண/ற/ட ஆகியன அதற்கு முன் முன் அண்ண

ஒலிகளாக *(prepalatal)* உச்சரிப்பதை நோக்கலாம். மேற்படி நூற்பாவின் வழி ல் முன் த வரின் றவாகிறது என்பதில் இவை இணைந்து இதற்கு முன்னர் உள்ள றவாக மாறுகிறது. இதை பின்னிலைப்படுத்தும் ஒலியன் மாற்றம் *(backward movement)* என்று கொள்ளலாம். இவ்வாறே ன் முன் ந வரின் னவாகிறது என்னும்போது இதை ஒருநிலைப்படுத்தும் ஒலியன் மாற்றம் *(assimilation)* என்று கொள்ளவேண்டியிருக்கிறது. இதன் அடிப்படையில் ம் முறையே ங், ஞ், ந் என மாறுவதை முன்னிலைப்படுத்தும் ஒலியன் மாற்றம் என்றே கொள்ளவேண்டும். இந்த வகையில் தொல்காப்பியர் நூற்பாக்களின் வழி ஒலிமாற்றங்களின் தன்மைகள் அனைத்தையும் பிரிக்கவேண்டியது கட்டாயமாகிறது.

சொற்களுக்குள் பல ஒலி மாற்றங்கள் நிகழ்வதை நாம் அறிவோம். அவற்றைத் தொல்காப்பியர் கூறும் செய்யுள் வழக்கிலும் பொது வழக்கிலும் ஏற்படும் மாற்றங்களையும் இக்காலப் பேச்சுவழக்கில் ஏற்படும் மாற்றங்களையும் அதன் தன்மைகளின் அடிப்படையில் பிரித்தறியவேண்டியிருக்கிறது. குறிப்பாக ஒலிமாற்றங்களின் குணங்களையும் அறியவேண்டியது அவசியமாகிறது. ல் றவாக மாறுகிறது. ஆனால் ற் லவாக மாறுவதில்லை. ம் ந்/ங்/ஞ் ஆக மாறுகிறது ஆனால் ந்/ங்/ஞ் ம் ஆக மாறுவதில்லை. இதனின்று அறிவதென்னவென்றால் ஒலி மாற்றங்கள் முன்னிலிருந்து பின்னுக்குத்தான் மாறும் பின்னிருந்து முன்னுக்கு மாறாது என்பதை அறிகிறோம். ஒரு நிலைப்படுத்தும்போதும் இதே நிலையைத்தான் காணமுடிகிறது. ன ந முன் வரும்போது ன வாக மாறுகிறதேயொழிய ன ந வாக மாறுவதில்லை.

சங்கப் பாடல்களில் தொல்காப்பியர் கூறும் அழகியற் கூறுகள்

மொழிவழி இயற்கையையும் மனித வாழ்வையும் இணைக்கும் அத்திறனை மொழியின் அழகியற் கூறுகளில் ஒன்று எனவே அறியவேண்டியிருக்கிறது. இவ்வகை அழகியற் கூறுகளைப் பல நோக்குகளில் அறிவதையே இலக்கியத் திறனாய்வு என்கின்றனர். அழகியற் கூறுகளைப் பொதுவாக நவரசங்கள் என வடமொழி இலக்கணங்கள் அறுதியிடுகின்றன. இதற்கு மாறாக இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் பல்வேறு இலக்கியப் பண்புகளை மொழித் திறன்களின் அடிப்படையில் வெளிப்படுத்துவதையும் அழகியற் கூறுகள் என அறியலாம். இலக்கியத்தின் சிறப்புத்தன்மை என எதை நாம் குறிப்பிடுகிறோம்? அச்சிறப்புத் தன்மையை அறிய நாம் இலக்கியத்தை எங்ஙனம் அலசுகிறோம்? அவ்வாறு அலசும் முயற்சியில் மொழி மற்றும் மொழியியற் கருத்துகளின் பங்கு என்ன என்பது பற்றி அறியமுற்படுவது தேவையாகிறது. முக்கியமாக இலக்கியங்களில் இலக்கியவாதிகள் தங்களை அறியாமலே பயன்படுத்தியுள்ள மொழியியற் கோட்பாடுகளைக் கண்டறியும் போது இலக்கியங்களின் நயத்தையும் அவற்றில் திறம்படக் கூறப்பட்டிருக்கும் பல்வேறு உண்மைகளையும் நன்கு அறியும் வாய்ப்பு கிடைக்கிறது. வடமொழி இலக்கணம் நவரசம் என அறுதியிட்டாலும் தொல்காப்பியர் எட்டு மெய்ப்பாட்டு வகைகளை வரிசைப்படுத்துகிறார்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பா லெட்டாம் மெய்ப்பா டென்ப (பொருள். 247).

இந்த எட்டு மெய்ப்பாடுகளையும் நூற்பாக்கள் 248 லிருந்து 255 வரை ஒவ்வொன்றாக அவை வரும் சூழல்களோடு விளக்குகிறார் தொல்காப்பியர். இம்மெய்ப்பாட்டு உணர்வுகளை இலக்கியங்களிலும் அன்றாட வாழ்விலும் நாம் காணமுடிகிறது.

**3.2.1. எள்ளல்**

**எள்ளல் இளமை பேதமை மடனென்று**
**உள்ளப் பட்ட நகைநான் கென்ப (பொருள். 248)**

பாலை - தலைவி கூற்று

**அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து**
**பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்**
**உரவோர் உரவோர் ஆக**
**மடவம் ஆக மடந்தை நாமே.**

**-கோப்பெருஞ்சோழன். (குறுந். 20)**

அருள் மற்றும் அன்பு ஆகியவற்றைப் பொருட்படுத்தாது பொருளே முக்கியம் எனத் தலைவன் தலைவியைப் பிரியும் போது அவனுடைய உரவோராக மடமை பொருந்தி மடந்தையாக நகைப்புக்குரியராகிறோம் நான் எனத் தலைவனைப் பிரிந்த மடந்தைகளை எள்ளி நகையாடும் வழியும் அவர்கள் இளமையில் பேதமை அடைந்த வழியிலும் ‘நகை’ என்னும் மெய்ப்பாட்டை அறிகிறோம் இக்குறுந்தொகைப் பாடலின் வழி. ‘எள்ளல்’ என்னும் மெய்ப்பாட்டுக்கு இலக்கியங்களில் பல எடுத்துக்காட்டுகள் கொடுக்கலாம். எடுத்துக்காட்டாகப் பின்வரும் குறுந்தொகைப் பாடலில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்ததை எண்ணி நீ பாடிக்கொண்டே இரு என எள்ளி நகையாடுவதைப் போன்ற ஒரு உணர்வைக் கொடுக்கிறாள்.

குறிஞ்சி - தோழி கூற்று

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டேஅவர்

நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே.
-ஔவையார். (குறுந். 23).

தலைவனின் அகத்தில் இடம் பெற்ற அகவன் மகளே! நீ மணிகளின் அடுக்கு போல நல்ல நெடுங்கூந்தலைப் பெற்று மிகவும் அழகாக இருக்கிறாய். நீ பாடிக்கொண்டிரு! தொடர்ந்து பாடிக்கொண்டேயிரு! உன்னுடைய அவர் உன்னை விட்டுப் பிரிந்து நல்ல நெடிய குன்றத்தை நோக்கிச் சென்ற பாட்டை பாட்டாகப் பாடிக்கொண்டேயிரு! என 'எள்ளல்' உணர்வை வெளிப்படுத்திப் பாடப்பட்டுள்ளது இப்பாடல். 'பாடிய பாட்டு' என்பது 'அவர் உன்னை விட்டுச் சென்றது' என்பதன் புதைநிலைப் பொருளாகக் கொள்ளவேண்டியிருக்கிறது. இதை இக்காலத் தமிழில் புரிந்துகொள்ளவேண்டுமென்றால், 'நான்பாட்டுக்கும் பாடிக்கொண்டேயிருக்கிறேன்! நீபாட்டுக்கு உன் போக்கில் போய்க்கொண்டேயிரு!' என்னும் உரையாடலை நோக்கலாம். உண்மையிலேயே இப்பாடலில் 'பாடுக பாட்டே' என்பது அவரைப் பற்றிப் புகழ்ந்து பாடு என்று எடுத்துக்கொள்ள முடியாது! புறநிலையில் 'பாட்டு பாடு' என்பது 'நீ அவருக்காகக் காத்திருக்கிறாய்! ஆனால் அவர் உன்னை எங்கு கண்டுகொண்டார்! நீ அவரை எண்ணியே பாடிக்கொண்டிரு' என எள்ளி நகையாடும் வண்ணம் வந்திருப்பதை உணரவேண்டும்.

நகை என்பதை இளமையிலும் பேதமையினாலும் மடமையினாலும் பெறலாம் என்பதை ஓரம் போகியார் என்னும் பெண்பாற் புலவர் புறநானூற்றிலும் குறுந்தொகையிலும் சில பாடல்களைப் பாடி இயற்கையின் வழித் தமிழின் வரலாற்று நுணுக்கத்தைக் கொடுத்திருக்கும் சூழலில் காணலாம். தலைவன் வீடு திரும்பும் நேரத்தை நோக்கியிருக்கும் தலைவிக்கு அவனுக்காகக் காத்திருந்த பிறகு மாலையைக் கண்டு இன்பம் அடைகிறாள். "கங்குலும் பகலுங் கண்டுயிலறியாள்" என்னும் ஒரு வரி திருவாய்மொழியில் வருகிறது. இரவாயிருப்பினும் பகலாயிருப்பினும் கண் மூட வழியறியாள் என்னும் இவ்வரி வழி அக்காலப் பெண்களின் மன உளைச்சல்களை ஒருவாறு நம்மால் ஊகிக்கமுடிகிறது. ஓரம் போகியார் கங்குல் உடைந்த விதத்தைச் சங்ககாலத்தின் வரலாற்று நுணுக்கம் ஒன்றைத் தரும் விதத்தில் பாடியிருப்பதைக் காணுங்கள்.

122. நெய்தல் - தலைவி கூற்று
பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீர் ஆம்பலும் கூம்பின இனியே
வந்தன்று வாழியோ மாலை
ஒருதான் அன்றே கங்குலும் உடைத்தே.
-ஓரம் போகியார்.

அழகான கால்களை உடைய கொக்குகள் மீனுக்காகப் பகலில் அசையாமல் காத்திருக்குமாம். அவற்றின் பணியை நிறைக்கும் வண்ணம் குண்டாக இருக்கும் நீர் ஆம்பல்கள் இனிதாகக் கூம்பினவாம். அங்கனமே தலைவி கூறுகிறாள் எனது மனதுக்கினிய தலைவனைச் சேர வழிவகுக்கும் என் மனதுக்கினிய கங்குலைத் தரும் வண்ணம் மாலையும் இதோ வந்துவிட்டது என்கிறாள். தலைவனுக்காகவே பைங்காற் கொக்கு போன்று தலைவிகள் காத்திருந்த காலம் சங்ககாலம் என்னும் வரலாற்று நுணுக்கத்தை ஓரம் போகியார் நமக்குத் தருவதோடு தொல்காப்பியரின் எள்ளல் எதுவும் அற்ற நகையுணர்வையும் இப்பாடல் வழித் தருகிறாள்.

3.2.2. அழுகை

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே (பொருள். 249)

அழுகை வரும் இடங்களாக நான்கு சூழல்களை இந்நூற்பா வழி தொல்காப்பியர் விளக்குகிறார். ஒருவர் ஒருவரை இழிவு படுத்தும்போது அழுகை வரலாம். இழவு காரணமாக அழுகை வரலாம். அசையெனும் வேதனைப்படும் போது அழுகை வரலாம். இவற்றோடு வறுமையிலும் அழுகை வரலாம். இம்மெய்ப்பாடுகள் அனைத்தும் இணைந்து ஏற்பட்ட துயரத்திலும் அழுகை ஏற்படலாம்.

நெய்தல் - தலைமகள் கூற்று
நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே
இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி
அமைதற் கமைந்தநங் காதலர்
அமைவிலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே.
-காமஞ்சேர் குளத்தார். (குறுந். 4).

காதலரோடு இருந்த தொடர்பு துண்டிக்கும் போது இமைகளையும் வருத்தும் அளவுக்கு நீர் தாங்கி நெஞ்சு நோகும் என்று வரும் இக்குறுந்தொகைப் பாடலில் தொல்காப்பியர் கூறும் 'அழுகை' எனும் மெய்ப்பாடு வெளிப்படுகிறது. காதலன் பிரிந்ததால் இழிவு ஏற்பட்டது. அதை ஒரு இழவாகவே கொள்கிறாள் தலைவி. இதானால் வேதனையுறுகிறாள். அமைதற்கு அமைந்த காதலர் அமைவிலர் ஆகுவதால் காதலில் வறுமையும் ஏற்பட்டு இவை அனைத்தும் இணைந்து 'அழுகை' என்னும் மெய்ப்பாடு வெளிப்படலாம்.

3.2.3. இளிவரல்

மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (பொருள். 250)

மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகிய நான்கும் 'இளிவரல்' எனத் தொல்காப்பியர் கூறுகிறார். மூப்பினாலும் பிணியினாலும் வரும் வருத்தத்தை 'இளிவரல்' என்பது இக்கால வழக்கில் இல்லை. மாறாக

இதைப் 'பரிதாபம்' என்றோ 'மனதின் ஈரம்' என்றோ கூறுவதைக் காண்கிறோம்.

பாலை

*அண்ணாந்து ஏந்திய வன முலை தளரினும்*
*பொன் நேர் மேனி மணியின் தாழ்ந்த*

*நல் நெடுங் கூந்தல் நரையடு முடிப்பினும்*
*நீத்தல் ஓம்புமதி பூக் கேழ் ஊர*
*இன் கடுங் கள்ளின் இழை அணி நெடுந் தேர்க்*
*கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்*
*வெண் கோட்டு யானைப் போஒர் கிழவோன்*
*பழையன் வேல் வாய்த்தன்ன நின்*
*பிழையா நல் மொழி தேறிய இவட்கே (நற்ற். 10).*

'அண்ணார்ந்து வளர்ந்த மார்பகம் தளர்ந்தாலும்' என்பதன் வழியும் 'பொன் போன்ற மேனியில் இருக்கும் மணிக்கும் கீழே வளர்ந்த நல்ல நெடுங் கூந்தல் நரை பெற்று முடித்தாலும்' என்பதன் வழியும் மூப்பை அறிகிறோம். வெண்கோட்டு யானை மீது சென்ற போர் வீரன் மீது வேல் வந்து பாய்ந்தது போல என்ற வழி பிணியையும் வருத்தத்தையும் அறிகிறோம். இவ்வளவு துயரங்களுக்கிடையும் உனது பிழையாத நல்ல மொழி இவருகளுக்கு மிகவும் மதிப்பிற்குரியது என்றவாறு.

*3.2.4. மருட்கை*
*புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு*
*மதிமை சாலா மருட்கை நான்கே (பொருள். 251)*
*....*
*தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்*
*ஒண்கதிர் ஞாயிறு போலவும்*
*மன்னிய பெரும நீ நிலமிசை யானே (புறம். 6)*

எனப் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் பெருமையைப் பாரிகிழார் பாடும்போது மதியம் போலவும் ஒண்சுடர் ஞாயிறு போன்ற மன்னிய புகழுடையவனைக் கண்டு 'மருட்கை' உணர்வை அடைகிறோம். மருட்கை உணர்வினின்று அச்ச உணர்வை பிரித்தரியவேண்டியிருக்கிறது. மதிமை எனும் அறிவு சாரா மருட்கை என்கிற வகையில் புதுமைப் படைத்தோரைக் கண்டு மருள்வதும் பெருமை பெற்றோரைக் கண்டு மருள்வதும் சிறுமை பெற்றோரையும் கண்டு மருள்வதும் புத்தாக்கம் கொண்டோரைக் கண்டு மருள்வதும் அவர்கள் இவற்றைக் குறுக்குவழியில் பெற்றதையே தொல்கப்பியர் கூறுவதாக எண்ணவேண்டியிருக்கிறது.

*3.2.5. அச்சம்*
*அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்*
*பிணங்கல் சாலா மருட்கை நான்கே (பொருள். 252).*
*205 பாலை - இளநாகனார்*
*அருவி ஆர்க்கும் பெரு வரை அடுக்கத்து*
*ஆளி நன் மான் வேட்டு எழு கோள் உகிர்ப்*
*பூம் பொறி உழுவை தொலைச்சிய வைந் நுதி*
*ஏந்து வெண் கோட்டு வயக் களிறு இழுக்கும்*
*துன் அருங் கானம் என்னாய் நீயே*
*குவளை உண்கண் இவள் ஈண்டு ஒழிய*
*ஆள்வினைக்கு அகறிஆயின் இன்றொடு*
*போயின்றுகொல்லோ தானே படப்பைக்கொடு முள் ஈங்கை நெடு மா அம் தளிர்நீர் மலி கதழ் பெயல் தலைஇயஆய் நிறம் புரையும் இவள் மாமைக் கவினே (நற்ற். 205).*

அருவியினால் பெரும் ஒலி எழும்பும் பெரிய மலைக் கூட்டத்திடையே ஆளி என்னும் மிருகம் நல்ல மான்களை வேட்டையாடுவதோடு ஏழு கோள்களும் உகிர்ந்து பூம் பொறிகள் வெளிப்படும் வண்ணம் வெண்கோட்டு யானையின் நெற்றியில் அடித்து அவற்றையும் இழுக்கும் கொடுமையான கானகம் என்ற வழி விலங்கிலிருந்து பெரும் அச்சத்தை உணர்த்துகிறது இந்நற்றினைப் பாடல்.

*....*

*கவ்வை நல்அணங்கு உற்ற இவ்வூர்*
*கொடிதுஅறி பெண்டிர் சொற்கொண்டு அன்னை*
*கடிகொண் டனளே (அகம். 20).*

அன்னை கடுமை உணர்வைக் கொண்டதன் காரணம் அச்ச ஒலிகள் நிரம்பி நல் அணங்கு உள்ள இவ்வூரின் கொடிது அறிந்த பெண்டிரது சொல் கேட்டது என்ற வழி 'அணங்கு' வழி அச்சத்தை அறிகிறோம்.

இயற்கையில் பல நிகழ்வுகள் அச்சத்தை ஏற்படுத்துவனவாக இருக்கும். ஆந்தை கூவுதல், கிளைகள் முறிதல், இடி இடித்தல், புயல் அடித்தல், அதிகமாக மழை பெய்தல், நாய் ஊளையிடுதல் போன்றன தமிழர் மனதில் காலங்காலமாக அச்சத்தை ஏற்படுத்துவதாக இருந்து வந்துள்ளன என்பதை இலக்கியங்கள் வழி பல பாடல்களினின்று அறிகிறோம். இவ்வகையில் இந்நிகழ்வுகள் 'அச்சம்' எனும் உணர்வுக்கு ஆகுபெயராகப் பயன்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

*குன்றக் கூகை குழறினும் முன்றிற்*
*பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்*
*அஞ்சுமன் அளித்தெ னெஞ்ச மினியே*
*ஆரிருட் கங்குல் அவர்வயிற்*
*சாரல் நீளிடைச் செலவா னாதே. (குறு. 153).*

குன்றில் கூகையெனும் ஆந்தைக் கூவுவதும் வீட்டுக்கு முன்னால் உள்ள பலா மரத்தின் சினைகள் (கிளைகள்) கலை பாய்ந்து (குரங்கு பாய்ந்து) விழுவதும் (உகள்) அச்சத்தைத் தருவதாக இருப்பதாகத் தலைவி கூறுவதாக வருகிறது இக்குறுந்தொகைப் பாடல். ஆனால் அதிகமான இருளைக் கொண்ட இரவில் தலைவன் வரும்போது அந்த அச்சம் நீண்ட சாரல்களுக்கு இடையில் சென்றுவிடுகிறது என்று கூறுகிறாள் தலைவி.

இலைகளும் பூக்களும் உதிர்வதை அச்சத்தை உணர்த்தும் செயலாக இன்னும் சில சங்கப் பாடல்களிலும் காண்கிறோம்.

*நல்லிசை வெறுக்கை தருமார் பல்பொறிப்*
*புலிக்கேழ் உற்ற பூவிடைப் பெருஞ்சினை*
*நரந்த நறும்பூ நாள்மலர் உதிரக்*
*கலைபாய்ந்து உகளும் கல்சேர் வேங்கைத்*
*தேம்கமழ் நெடுவரைப் பிறங்கிய*
*வேங்கட வைப்பிற் சுரன்இறந் தோரே. (அகம். 141)*

கற்பனை நயம் மிகுந்த இப்பாடலில் இசையைத் தருமாறு அசைந்து புலியின் புள்ளிகளைக் கொண்ட பூக்களைக் கொண்ட நாரத்த மரத்தின் பெரிய கிளைகளிலிருந்து மலர்ந்த நறும் மலர்கள் உதிர அக்கிளைகள்

கருங்குரங்குகள் பாயக் கீழே விழும் என வருகிறது. இந்நிகழ்வைக் கற்களிடையே உள்ள வேங்கை மரங்களிலிருந்து பூக்களின் மணம் கமழ நீண்ட வேங்கட மலையைச் சார்ந்த ஊர்களிடையே வாழ்வோரின் கடின வாழ்வுக்கு ஒப்பாகக் கூறப்படுகிறது. “சுரன் இற” எனும் தொடர் மலைகளின் திறத்தையும் மேம்பட்ட கடினம் எனக் கொள்ளல் வேண்டும். மலைகளையும் விடக் கடின வாழ்வை அடைந்தோருக்குத் தடித்த கிளைகள் முறிந்து விழுவதற்கு ஒப்பாகக் கூறியிருப்பது நோக்கத்தக்கது. இங்ஙனமே காலை நேரம் கழியும் போது மிகுந்த மாயமான ஒலியில் குரங்குகள் மரத்தில் பாய்ந்து கிளைகள் விழும் அக்காலை மட்டும் அல்லாது மரமும் பயத்தைப் பகர்வதாக இருக்கிறது என்று பின்வரும் புறநானூறு பாடலில் கூறப்படுகிறது.

இலக்கியங்கள்வழி தொல்காப்பிய நூற்பாக்களைக் கூர்ந்து நோக்கும் போது எவ்வாறு தொல்காப்பியர் வாழ்வின் உணர்வுகளைத் தெள்ளத்தெளிவாக தனது நூற்பாக்கள் வழி இயம்பியிருக்கிறார் என்பதோடு அவ்வுணர்வுகளை எப்படி நாம் இலக்கியங்களின் வழி அறிந்துணர இயலும் என்பதும் நோக்கத்தக்கது.

***வாசு அரங்கநாதன், 2020. இக்காலத் தொல்காப்பிய மரபு. சென்னை: நியூ செஞ்சுரி பதிப்பகம்.***

# ஒரு கைப்பிடி அளவு கனவு



கனவு – என் மனதுக்கு இது ஒரு மருந்து
கனவு – கண்மூடி நான் போகும் உலகு

குழந்தையின் கனவில் படைத்தவன் முகமும்
சிறுவனின் கனவில் குறும்புகள் சிலவும்
வளர்ந்தவர் கனவில் நாளை நடப்பதும்
முதிர்ந்தவர் கனவில் நேற்று நடந்ததும்

மூடிய கண் முன் வந்து போகும்
தேடிய நொடியில் தொலைந்து போகும்

உண்ட உணவு என் உருவத்தை மாற்றும்
கண்ட கனவு என் வாழ்க்கையை மாற்றும்

ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவருக்கும்
ஒரு கைப்பிடி அளவு கனவு இலவசம்
கண்ட கனவை நினைவாய் மாற்றும்
திறமையும் அறிவும் அவரவர் கை வசம்.

கனவை விதைத்தவன் இறைவன்
அதைக் கண்டு மறந்தவன் மனிதன்

கனவைப் புரிந்தவன் அறிஞன்
அதை நோக்கிச் செல்பவன் தலைவன்

கனவில் வாழ்பவன் கவிஞன்
அதற்கு உருவம் கொடுப்பவன் கலைஞன்

அடுக்கு மாடிகளில் அறிவியல் ஏற
அழகு மாளிகையில் இலக்கியம் வாழ
நம் கனவுகள் தானே அடித்தளமாக!

கனவுகள் இன்றி கற்பனை ஏது ?
கற்பனை இன்றி மாற்றம் ஏது ?
மாற்றம் இன்றி மகிழ்ச்சி ஏது ?
மகிழும் மனமே கனவின் ஊற்று.

கனவில்லாமல் விமானம் ஏது ?
இன்று மனிதன் காலடி நிலவின் மீது.
கனவுகள் தானே கோட்டைகளாகும்?
கனவுகள் தானே என்னை மேடைகள் ஏற்றும்?

தெளிவெனத் தெரியும் தூங்கும் போது
தொலைந்து போகும் எழுந்த போது
அமைதியான கடல் போல் கனவு
அலைகள் மோதினால் கலைந்திடும் தெளிவு

கனவு கலைந்ததா ? – கவலை வேண்டாம்
கனவின் வலிமை கடல் போல் ஆழம்
ஒவ்வொரு நாளும் மனதைத் தொட்டு
தெளிவாய் வழியை கனவுகள் காட்டும்

தாயின் அன்பும் தலைவனின் தாகமும்
கலைஞனின் கற்பனை அறிஞனின் அறிவும்
வீரனின் வேகமும் ஒரு சிறுமியின் கனிவும்
தொடங்கிய தெல்லாம் ..
ஒரு கனவில் தானே?

நம் கைகளை விட்டுப் பொருள் போனாலும்
நம்பிக்கைகளை விட்டு மனம் துவண்டாலும்

தூக்கத்தில் தொடங்கிய கனவும்
தூரத்தில் தெரியும் நிலவும்
ஒவ்வொரு நாளும் வளரும்
ஒரு நாள் முழுதும் தெரியும்

ஒரு கைப்பிடி அளவு உணவு
ஒரு கைப்பிடி அளவு துணிவு
ஒரு கைப்பிடி அளவு கனிவு
ஒரு கைப்பிடி அளவு கனவு
மனிதனுக்கிதுவே மருந்து !

வீட்டில் தொடங்கி நாடும் செழிக்க
மனிதன் சிறந்து மனிதம் சிறக்க

உன் கனவுக்காக காத்திரு ..
அதன் கருவைப் புரிந்து வளர்த்திடு ..

உன் கனவுக்காகக் காத்திரு ..
விழித்ததும் எழுந்து உழைத்திடு ..

உன் கனவுக்காக காத்திரு ..
அது காட்டும் வழியில் போர் தொடு ..

**வெ. நீலகண்டன்**

# கைப்பிடி அளவு கனவு



கனவு தேவதை வந்தாள்
எனது கைகளைப் பற்றிக் கொண்டாள்
காண்போமா புது உலகம் என்றாள்
நானும் இசைந்து தலையசைத்தேன்

இதுவல்லவோ பிரபஞ்சம்
இளந்தென்றலாய் காற்று
இசைபாடும் குயில்கள்
இனிமையுடன் வரவேற்க
கனிவான பார்வையுடன்
கள்ளமில்லா மனிதர்கள்

சாதிமத வேறுபாடில்லை
சகோதரத்துவமும் சமத்துவமும்
சங்கீதம் பாடியது
அன்பான மனமும்
பண்பான குணமும்
மனிதநேயம் வளர்க்கும்
மகத்தான பிரபஞ்சம்

குறைகளும் இல்லை
குற்றங்களும் இல்லை
நல்லவர்கள் நாடாள
நல்லாட்சி மலர்கிறது

மனிதன் மனிதனாய் இருக்கிறான்
மது அருந்தாமல் சிறக்கிறான்
மனிதத்தை வளர்க்கிறான்
மங்கையரை மதிக்கிறான்
மானுடம் காக்கிறான்

போட்டியும் இல்லை
பொறாமையும் இல்லை
ஒற்றுமை நிலவுகிறது
ஒருமைப்பாடு வளர்கிறது
எல்லோருக்கும் கல்வி
எளிதாய்க் கிடைக்கிறது

அள்ளித் தரும்
அட்சய பாத்திரமாய்
நீர்வளமும் நிலவளமும்
நிலைத்தோங்கி நிற்கிறது
விளைநிலம் செழித்து
விவசாயம் சிறக்கிறது
இயற்கை அன்னை
இன்பத்தில் திளைக்கிறாள்

குன்றாத வளமும்
குறைகாணா மனமும்
நிறைவான வாழ்க்கை
நிலையான இன்பம்

எவரிடத்திலும் அன்பு
எங்கு நோக்கினும் புன்னகை
எல்லோரிடத்தும் பரிவு
எண்ணிலடங்கா இன்பமிங்கே

இதுவல்லவோ பிரபஞ்சம்
இப்படியொரு வாழ்வு
எப்போது கிடைக்கும்
கைப்பிடி அளவு கனவு
கடலாய்ப் பெருக்கெடுத்தது
கனவு தேவதையே
நனவாக்குவாயா!

–மஞ்சுஸ்ரீ முத்துகணேசன்,
ஆசிரியர், சி. ஆர். தமிழ்ப் பள்ளி

# கைப்பிடி அளவு கனவு



கனவு தேவதை வந்தாள்

எனது கைகளைப் பற்றிக் கொண்டாள்

காண்போமா புது உலகம் என்றாள்

நானும் இசைந்து தலையசைத்தேன்

இதுவல்லவோ பிரபஞ்சம்

இளந்தென்றலாய் காற்று

இசைபாடும் குயில்கள்

இனிமையுடன் வரவேற்க

கனிவான பார்வையுடன்

கள்ளமில்லா மனிதர்கள்

சாதிமத வேறுபாடில்லை

சகோதரத்துவமும் சமத்துவமும்

சங்கீதம் பாடியது

அன்பான மனமும்

பண்பான குணமும்

மனிதநேயம் வளர்க்கும்

மகத்தான பிரபஞ்சம்

குறைகளும் இல்லை

குற்றங்களும் இல்லை

நல்லவர்கள் நாடாள

நல்லாட்சி மலர்கிறது

மனிதன் மனிதனாய் இருக்கிறான்

மது அருந்தாமல் சிறக்கிறான்

மனிதத்தை வளர்க்கிறான்

மங்கையரை மதிக்கிறான்

மானுடம் காக்கிறான்

போட்டியும் இல்லை

பொறாமையும் இல்லை

ஒற்றுமை நிலவுகிறது

ஒருமைப்பாடு வளர்கிறது

எல்லோருக்கும் கல்வி

எளிதாய்க் கிடைக்கிறது

அள்ளித் தரும்

அட்சய பாத்திரமாய்

நீர்வளமும் நிலவளமும்

நிலைத்தோங்கி நிற்கிறது

விளைநிலம் செழித்து

விவசாயம் சிறக்கிறது

இயற்கை அன்னை

இன்பத்தில் திளைக்கிறாள்

குன்றாத வளமும்

குறைகாணா மனமும்

நிறைவான வாழ்க்கை

நிலையான இன்பம்

எவரிடத்திலும் அன்பு

எங்கு நோக்கினும் புன்னகை

எல்லோரிடத்தும் பரிவு

எண்ணிலடங்கா இன்பமிங்கே

இதுவல்லவோ பிரபஞ்சம்

இப்படியொரு வாழ்வு

எப்போது கிடைக்கும்

கைப்பிடி அளவு கனவு

கடலாய்ப் பெருக்கெடுத்தது

கனவு தேவதையே

நனவாக்குவாயா!

–மஞ்சுஸ்ரீ முத்துகணேசன்,
ஆசிரியர்,
சி. ஆர். தமிழ்ப் பள்ளி

# கைபிடியளவு கனவு



கைபிடியளவு கனவு எனும்
தலைப்பினிலே
என் உயிர்த்தமிழில் கவிதை
வரைந்திட முனைந்தேன்..
ஒரு தந்தை எழுதும் கடிதமாய் என்
கவியை அவர் கனவை
வடித்திட்டேன்..
வாசித்து மகிழ்ந்திடுங்கள் ஒரு
கருவில் பிறந்த கைப்பிடியளவு
கனவு அவர் உலகான கதையை...

என் கைகளிலே என் கனவுலகு..
முவ்வாறு ஈரு
முத்தெடுக்கும் பேறு ..
முந்தியிலே முடிக்காமல்
கண் இமைத்திடவும்
கவனம் கொண்டாள் ..

அவள் கண்நோக்கி
யாம் கொண்ட காதல் பரிசை
அவள் கருவாக சுமந்திட்டாள்
நான் கனவாக வளர்த்திட்டேன்..

அவள் ஆழமான அழுகை தன்னில்
அழகாய் பிறந்திடுவாள்..
பிறை நிலவாய் முகம்
மலர்ந்திடுவாள்..
தெய்வமெனப் போற்றிவிடும்
செவிலியரின் கரங்களிலே
மரகதப்பூ போர்த்திவருவாள்
எனது மூன்றாம் மஹாராணி ..

நெற்றி முகர்ந்து முத்தமிடுவேன்
என் கைகளுக்குள்ளே
நான் காணும் கனவுகளின் நாயகி..
இவள் எனது கதையின் நாயகி..
மாலையிலே வீட்டையும்
குருவிகளின் கீச்சொலியாய்
இவள் மழலை மொழி..
ஆழியிலே அலை ஆர்ப்பரிக்கும்
அமுத மொழி ..

முயலும் நின்று இரசித்திடுமாம்
கொஞ்சும் சலங்கையுடன்
இவள் முதல் எட்டுக்களை..
ஆயிரம் வானவில்லை
குழைத்தெடுத்து
வரமகளும் வரைந்திடுவாள்
இவள் போன்றே ஓர் அழகோவியம்..

மானாட மயிலாட
என் மரகத வீணை இவள் விழியாட
கால்களோடு கைகளிலும்
சிலம்பாடுவாள்..
வரும் யுகத்தின் பாரதியாய் புதுக்கவி
பாடுவாள் ..

அறம் காக்கும் ஆளுமை
கொள்வாள்..
தீதுகண்டால் சுட்டெரித்திடும்
வீறுகொள்வாள் ..
வீடாளுவாள் .. என் நாடாளுவாள் ..
தன் புன்னகையால்
இப்புவியாளுவாள்..

என் கையளவு கருவானவள்
என் கனவானவள்
இன்று இவள் கனவே என் உலகாய்
உரு மாற்றியவள்

இவள் உயர நன் உயிர் கொள்வேன் ..
நான் கொண்ட வாழ்வின் வரமாய்
வளர்த்திடுவேன் என் தாயை!!
இப்படிக்கு
அன்புள்ள அப்பா
காயத்திரி சண்முகசுந்தரம்

# கைப்பிடி அளவு கனவு



உனக்கும் உள்ளது எனக்கும் உள்ளது
ஆயிரமாயிரம் கனவுகள் - ஒரு கைப்பிடி அளவு மனதில்!
பகலில் சிகரத்தைத் தொடும் நம்பிக்கையாக,
இரவில் அடிமனது தாகத்தின் பிரதிபலிப்பாக
வரும் கனவுகள் கடல் ஆழத்தினும் ஆழமானது!
இப்படிப்பட்ட கனவுகளை கைப்பிடிக்குள்
அடக்கத்தான் முடியுமோ?

எந்நேரமும் நினைவிலிருந்து கனவினை எட்டிப்பிடி
என்று யானை பலத்தை தரும் -
பகலின் கனவு!
சில நேரம் நினைவிலும், நினைவில்லாமலும்
சில நேரம் தென்றலாய், சில நேரம் புயலாய் வரும் -
இரவின் கனவு!

அனைவருக்கும் சிறியது பெரியது என்று அளவில்லா
கனவுகள்.
காக்கைக்கும், வேங்கைக்கும் கூட பல கனவுகள்!
காக்கைக்கு தன் கூட்டை காக்க வேண்டும்!
வேங்கைக்கு காட்டை ஆள வேண்டும்!
இப்படியாக ஐந்தறிவு ஜீவன்களையும் கூட
கனவுகள் விட்டு வைப்பதில்லை.
ஆறறிவு ஜீவன்களையா விட்டு வைக்கும்?

ஒரு குழந்தைக்கு தன் அன்னையின் முத்தம்;
ஒரு தாய்க்கு தன் குழந்தையின் சிரிப்பு;
ஒரு தந்தைக்கு தன் குடும்ப நிம்மதி;
ஒரு ஆசிரியருக்கு தன் மாணவனின் கல்வித்தரம்;
ஒரு போராளிக்கு தன் காரியத்தில் வெற்றி;
ஒரு தலைவிக்கு தலைவனின் வருகை;
ஒரு விவசாயிக்கு முப்போகம் விளைச்சல்;
ஒரு செல்வந்தனுக்கு நிம்மதியான தூக்கம்;
ஒரு மருத்துவருக்கு தன் நோயாளியின் உடல்நலம்;
ஒரு விஞ்ஞானிக்கு கனவை காண வேண்டும்,
அதையும் பெரியதாய் காண வேண்டும்.
இப்படியாக கனவுகள் அனைவருக்கும்
பல பரிமாணங்களில்...

ஆம்! கலாமின் கனவை நினைவாக்குவோம்!
கனவு காண்போம்!
அதையும் பெரியதாய் காண்போம்!!

கனவோடு,
அனிதா குணசேகரன்

# கைப்பிடி அளவு கனவு



பள்ளி படலை திறந்து
அள்ளியணைத்த புத்தகப்பை அறியாமைக்கு
கொள்ளி வைக்க கனவு கண்டேன்

கருவறை சுமந்த தாயும்
தரு நிழல் தந்த தந்தையும்
திரு வளிந்து காப்பகத்தில்
பெரு துயர் அடைநிலை அழியக் கனவு கண்டேன்

பெண்மையைத் தூற்றி
ஆண்மையாதிக்கம் பெருகி
கண்மை அழியக் கண்ணீர் வடித்த
வெம்மை காலங்கள் கடந்து போக கனவு கண்டேன்.

இனமத பேதம் பேசி
கனகச்சிதமாய் பிரித்தாளுகை செய்து
மன வெளியைப் பாலையாக்கி
குணமில்லாதோர் ஆட்சி வீழக் கனவு கண்டேன்

பூத்த கொடிகளும்
பூக்களுமிணைந்து
பூஞ்சோலையாகி
பூவானமாய் வாழ கனவு கண்டேன்.
என் கனவுகள் விழி நீராய் வீழ்ந்த போது
கவனமாய் அதை பொறுக்கியெடுத்தேன்
கைப்பிடியளவான போதும் - அது
காரம் பெரிதெனவுணர்ந்தேன் அவை
மெய்ப்பட வேண்டியகால் நடந்தேன்.

விழி வாங்கிய கனவு - இதய
குழிதனில் விழுந்து – தமிழ்
மொழியில் கரைந்து – கவி
துளியாய் சொட்டுகிறது – உணர்வில்

என் தேசத்து பூக்கள்
வன் விரல்கள் தீண்டாது
மென் பஞ்சு கரமணைத்து
கண்ணென காக்க கனவு கண்டேன்
துள்ளிநடை போட்டு

**பிரியா வேணுகோபாலன்**

# தமிழர் பண்பாடு



உலகிலுள்ள பல பண்பாடுகளில் சிறந்ததும், முதன்மையானதுமாக திகழ்வது நம் தமிழர் பண்பாடு. நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களுக்கு இல்லாத தனிச்சிறப்புகள் பல தமிழ் நாட்டிற்குண்டு. தமிழ் நாடானது பல இயற்கை வளங்களையும், மனிதனை மேம்படுத்துகின்ற அன்பு, ஈகை, புகழ், பெரியோரைத் துணைக் கொள்ளல், மனிதநேயம், நன்றி மறவாமை, புகழ்பட வாழ்தல், பயன் கருதாது கொடுத்தல், ஒற்றுமை உணர்வு போன்ற பண்புகள் மக்களிடையே பரந்து காணப்படுகிறது. தமிழ்ப் பண்பாடு இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா என உலகம் முழுவதும் தமிழர்களின் வாழ்க்கை முறைகளில் கலந்திருக்கிறது.

**பண்பாடு**

பண்படு என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியதே பண்பாடு ஆகும். பண்பாடு என்பது, குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. சமூகவியல் அறிஞர்களின் கருத்தின்படி பண்பாடு என்பது வாழ்க்கை முறை. ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் ஒரு பண்பாடு உண்டு. ஒரு சமுதாயத்தில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் அது வெளிப்படுத்தும்.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கோர் குணமுண்டு"

என்று தமிழை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர்.

வேறு எந்த மொழிக்கும் இல்லாத பெருமை தமிழுக்கும் தமிழருக்கும் உண்டு. மொழிக்கு இலக்கணம் வகுத்த தமிழர்கள் மனித வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்து வாழ்தனர். மனித இனம் எப்படி வாழவேண்டும் என்பதை விட எப்படி வாழக்கூடாது என்று வாழ்வியலைக் கற்றுக் கொடுத்திருக்கிறது தமிழரின் பண்பாடு.

தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டுமல்ல முகம் தெரியாதவராக இருந்தாலும் அவர்களை அன்போடு



உபசரித்து முகம் மலர உணவளித்து உள்ளன்போடு வழியனுப்பும் வாழ்வியலை கடைப்பிடிக்கின்றனர்.

தமிழர்கள் தம் பண்பாட்டில் காதலோடு சேர்த்து வீரத்தையும் விதைத்து சென்றுள்ளனர். எதை விதைக்கிறோமோ அதுதான் முளைத்து நமது வாழ்வில் பலன் தரும் என்பதை உணர்ந்த மக்கள், நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும் என்றும் கெட்டது நினைத்தால் கெட்டதே நடக்கும் என்றும் வாழ்வியலின் எதார்த்தத்தை எடுத்துக்காட்டி வாழ்ந்து வருகின்றனர். இதுமட்டுமன்று, ”யாதும் ஊரே யாவரும் கேளீர்” என்ற வாக்கியத்தின் மூலம் கணியன் பூங்குன்றனார் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் ஒற்றுமை உணர்வை ஓங்கச்செய்துள்ளனர்.

தமிழ்ப் பண்பாடானது வாழ்வியல், பழக்கவழக்கங்கள், ஆடை அணிகலன்கள், மொழி, இலக்கியம், இசை, நடனம், நாட்டுப்புறக்கலை, தற்காப்புக்கலை, மயிலாட்டம், ஒயிலாட்டம், கும்மிபாட்டு, காவடி ஆட்டம், கட்டிடக்கலை, ஓவியம், சிற்பம், விளையாட்டு, தத்துவம், மதங்கள், மரபுகள், சடங்குகள், அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் கலைகள் போன்றவற்றின் வழியாக அனைத்திலுமே கலந்திருந்தது.


மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் வரும் நிகழ்வுகள், திருமணம், புதுமனைபுகுதல், தொழில் ஆரம்பம் போன்ற நிகழ்வுகளை சுப நிகழ்வுகளாக கொண்டாடி பண்பாட்டை வெளிப்படுத்துகின்றனர்.

### நிறைவாக

ஒரு மாணவன் வேதியியல் படித்தால் அந்த பாடப்புத்தகம் வேதியியலை மட்டும்தான் கற்று தரும். இப்படித்தான் கணிதமும், இயற்பியலும், கணிப்பொறியும், பொறியியலும் மருத்துவமும் அந்தந்தத் துறையைச் சார்ந்த அறிவை மட்டுமே வளர்க்கும். ஆனால் இலக்கியம் மட்டுமே வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. சக மனிதர்கள் மீதான மனித நேயத்தை, தோல்விகளைத் துரத்தும் தன்னம்பிக்கையை, புல் நுனியில் தூங்கும் பனித்துளியின் அழகியலைக் கற்றுத் தருகிறது.

இத்தகைய மேம்பட்ட பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கொண்டுள்ள நம் தமிழரின் பெருமைகளைக் கட்டி காப்பதும் அவற்றை தலைமுறை தாண்டி நிலைப்பெற செய்வதும் தமிழர்களான நமது ஒவ்வொருவரது கடமையாகும்.

முனைவர் ப.கு. மகேஸ்வரி



# பிட்ஸ்பர்க் தமிழ்ப்பள்ளி



*பிட்ஸ்பர்க் தமிழ்ச் சங்கத்தின் பதாகையின் கீழ் இரும்பு நகரமான பிட்ஸ்பர்க்கில், 2012 ஆம் ஆண்டு தமிழ் வகுப்புகள் தொடங்கப்பட்டன. அது தொடங்கியதிலிருந்து, அமெரிக்கத் தமிழ் அகாடமியுடன் (ATA) இணைந்து கட்டமைக்கப்பட்ட முறையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.*

*நாங்கள் 5 குழந்தைகளுடன் தொடங்கி எங்கள் 3 மையங்களில் 250க்கும் மேற்பட்ட மாணவர்களுடன் வளர்ந்து வருகிறோம். அந்த மையங்களில் 35க்கும் மேற்பட்ட ஆசிரியர் தன்னார்வலர்கள் உள்ளனர். வாரந்தோறும் மூன்று வெவ்வேறு இடங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன. எங்கள் குழந்தைகள் பல மாநிலங்களில் பல்வேறு தமிழ் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளை பெற்றுள்ளனர்.*

*ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் குழந்தைகளுக்கு சான்றிதழ்களை வழங்குகிறோம் மற்றும் தன்னார்வ ஆசிரியர்களின் சேவைகளை அங்கீகரிக்கிறோம். பிட்ஸ்பர்க் தமிழ்ச் சங்கத்தின் ஒரு பகுதியாக, அடுத்த கட்டத்திற்கு வளர்ந்து, அடுத்த தலைமுறை தமிழ் பேசும் குழந்தைகளுக்கு நமது தமிழ் கலாச்சாரத்தை வழங்க நாங்கள் காத்திருக்கிறோம்.*

# தேனீக்கள் பாதுகாப்பும் இயற்கையின் முக்கியத்துவமும் - கரு



**வணக்கம்!!!**

எனது பெயர் லக்ஷிகா . அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகம் ஆண்டு விழாவில் மாறுவேடப் போட்டியில் நானும் எனது தந்தையும் பங்கு பெற்றோம். அப்போட்டியில் நான் தேனீயாகவும் எனது தந்தை பூவாகவும் மாறுவேடம் அணிந்தோம். பூவுக்கும் தேனிக்கும் இடையில் ஒரு உரையாடல் ! தேனீ என்றால் நம் அனைவருக்கும் நினைவு வருவது தேன் மட்டுமே ஆனால் அதையும் தாண்டி தேனீக்கும் உணவு உற்பத்திக்கும் மிக பெரிய சம்பந்தம் உள்ளது. தேனீக்கள் பூக்களில் மகரந்த சேர்க்கை செய்வதால் மட்டுமே அந்த பூக்கள் காய்க்கும் தன்மையை அடைகின்றன. அதன் மூலம் மக்களுக்கு உணவு கிடைக்கிறது. ஆனால் இப்பொழுது தேனீக்கள் அழிந்து கொண்டு வருகின்றன. இதன் அழிவால் மக்களுக்கு பிற்காலத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படும். இதில் இருந்து மக்கள் மீளவேண்டும் என்றால் மக்கள் தேனீக்களை அழியாமல் பாதுகாக்க வேண்டும் . அதற்கு மக்களாகிய நாம் இயற்கையை விரும்ப வேண்டும். இதன் மூலம் நாங்கள் இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து நாம் இயற்கையோடு ஒன்றி வாழவேண்டும் என்பதையும் தேனீக்களின் நன்மையையும் கூறுகிறோம்.

மேலும் நான் நன்றாக தமிழ் பேச உறுதுணையாக இருக்கின்ற தமிழ் கேணி தமிழ் பள்ளிக்கு மிக்க நன்றி !இப்பள்ளியில் தமிழ் பயில நான் பெருமை கொள்கிறேன்!

**தேனீக்கள் பாதுகாப்பும் இயற்கையின் முக்கியத்துவமும் – உரையாடல்**

*லக்ஷிகா :* (மகள்): ம்ம்ம்ம் ........................ (ரீங்காரம்) வணக்கம்! நான் லக்ஷிகா தேனீ . நான் தமிழ் கேணிதமிழ் சங்கத்தில் தமிழ் படிக்கிறேன். எனக்கு பூக்களை மிகவும் பிடிக்கும்.

*முருகேசன் :* (தந்தை): இந்த மலருக்கும் தேனீக்களின் ரீங்காரம் மிகவும் பிடிக்கும்.

*லக்ஷிகா :* மிக்க நன்றி ! நான் பூக்களில் இருந்து தேன் மட்டும் தான் எடுத்துட்டு வாரேன் என்று நினைக்கிறார்கள், அது மட்டும் அல்ல ....

*முருகேசன் :* வேறென்ன செய்யுமா இந்த தேனீ?

*லக்ஷிகா :* ம் சொல்லுகிறேன் பூக்கின்ற எல்லா பூக்களும் காயாகவோ, பழமாகவோ ஆகாது. நான் எந்த பூக்களில் அமர்கின்றேனோ அந்த பூக்கள் தான் காயாகவும் , பழமாகவும் மாறி மக்களுக்கு உணவாகிறது . ஆனால் ஒரே ஒரு கவலை!

*முருகேசன் :* அப்படி என்ன கவலை இந்த தேனீக்கு ?

*லக்ஷிகா :* ம்.. நாங்க இப்பொழுது அழிந்து கொண்டே வருகிறோம். நாங்கள் அழிவதால் மக்களுக்கு உணவு இல்லாமல் போகிவிடும். எங்களை அழியாமல் பாதுகாக்க வேண்டியது மக்களோட கடமை .

*முருகேசன்:* தேனீக்கள் அழியாமல் இருக்க மக்கள் என்ன செய்யணும்?

*லக்ஷிகா:* அதற்க்கு மக்கள் இயற்கையை விரும்பணும். பண்ணுவீங்களா? நீங்க பண்ணுவீங்களா?

நன்றி ! ம்ம்ம்ம் ....... (ரீங்காரம்)

# ஆசிரியை – மாணவர்கள்



ஆசிரியை : அனைவருக்கும் வணக்கம். என் பெயர் வைஷாலினி மோகன் குமார். நான் தான் உங்களுடைய தமிழ் ஆசிரியை. எல்லாரும் எப்படி இருக்கீங்க?

மாணவர்கள் : நல்லா இருக்கோம் ஆசிரியை.

ஆசிரியை : சரி! இப்போ நம்ம என்ன படிக்க போறோம் தெரியுமா? உங்க எல்லாருக்கும் பிடித்த பாடல் ஒன்று படிக்க போறோம்! எல்லாரும் தயாரா?

மாணவர்கள் : தயார் ஆசிரியை!!

ஆசிரியை : டாண் டாண், டாண் டாண் மணி அடிக்குது.

நம்மையெல்லாம் வருகவருக என்று அழைக்குது.

சிறுவரோடு சிறுமியரைச் சேர்த்து அழைக்குது.

அவரவர்கள் இடத்தில் வந்தே அமரச் சொல்லுது.

ஆசிரியர் வந்ததுமே நிற்கச் சொல்லுது.

அக்கறையாய்ப் பாடமெல்லாம் கற்கச் சொல்லுது.

படித்தபடி வாழ்க்கையிலே நடக்கச் சொல்லுது.

பலரும்போற்ற நல்லபெயர் எடுக்கச் சொல்லுது !!

இந்த பாடல் உங்க எல்லாருக்கும் பிடித்திருக்கும் நினைக்கிறேன் அடுத்த வாரம் வகுப்புக்கு வரும்போது இந்த பாடல எல்லாரும் மனப்பாடமா பாடனும் சரியா ?

மாணவர்கள் : சரி ஆசிரியை.

ஆசிரியை: இப்போ டாண் டாண் மணி அடிச்சதும் நம்ம எல்லாரும் வீட்டுக்கு போகலாமா?.. டாண் டாண் சத்தம்..

ஆசிரியை , மாணவர்கள் : நன்றி!! வணக்கம்!!



*சிவா(ஆதவன்):* கேள்விகளை நீ கேட்கிறாயா இல்லை நான் கேட்கட்டுமா?

*தருமி:* வேண்டாம் வேண்டோம், நானே கேட்குறேன். எனக்கு கேட்கத்தான் தெரியும்.

**தருமி:** பிரிக்க முடியாதது என்னவோ?

**சிவா:** தமிழும் சுவையும்

**தருமி:** பிரியக்கூடாதது?

**சிவா:** எதுகையும் மோனையும்

**தருமி:** சேர்ந்தே இருப்பது?

**சிவா:** வறுமையும் புலமையும்

**தருமி:** சேராதிருப்பது?

**சிவா:** அறிவும் பணமும்

**தருமி:** சொல்லக் கூடாதது?

**சிவா:** பெண்ணிடம் ரகசியம்

**தருமி:** சொல்லக் கூடியது?

**சிவா:** உண்மையின் தத்துவம்

**தருமி:** பார்க்ககக்கூடாதது?

**சிவா:** பசியும் பஞ்சமும்

**தருமி:** பார்த்து ரசிப்பது?

**சிவா:** கலையும் அழகும்

**தருமி:** கலையில் சிறந்தது?

**சிவா:** இயல் இசை நாடகம்

*தருமி:* நாடகம் என்பது?

**சிவா:** நடிப்பும் பாட்டும்

**தருமி:** பாட்டுக்கு?

**சிவா:** நாரதன்

**தருமி:** வீணைக்கு?

**சிவா:** வாணி

**தருமி:** அழகுக்கு?

**சிவா:** முருகன்

**தருமி:** சொல்லுக்கு?

**சிவா:** அகத்தியன்

**தருமி:** வில்லுக்கு?

**சிவா:** விஜயன்

**தருமி:** ஆசைக்கு?

**சிவா:** நீ

**தருமி:** அறிவுக்கு?

**சிவா:** நான்

**தருமி:** அப்பா, போதும். ஆளை விடும்.

# மாறுவேட போட்டி உள்ளடக்க விளக்கம்



**போட்டியாளர் பெயர் :** ஸ்ரீ உமா இளங்கோவன்

**வேடம் :** திருமதி M.S.சுப்புலக்ஷ்மி

**உடன் பங்கேற்றவர் :** சவிதா (போட்டியாளரின் தாய்)

**சிறுகுறிப்பு :** திரு ராஜாஜி அவர்கள் எழுதிய புகழ் பெற்ற பாடலான " குறை ஒன்றும் இல்லை " ஐ , திருமதி M .S .சுப்புலக்ஷ்மி அவர்கள் சபையில் பாடுகிறார்.

**உரையாடல் :**

தொகுப்பாளர் / வீணை இசைப்பவர் : வணக்கம் இன்று நம் ஆண்டு விழாவை சிறப்பிக்க வந்திருப்பவர் , ' இசை பேரரசி ' என்று உலக தமிழர்கள் அனைவராலும் போற்றப்படும் பரத் ரத்னா திருமதி M.S.சுப்புலக்ஷ்மி அவர்கள்.

M.S.சுப்புலக்ஷ்மி : வணக்கம்.

தொகுப்பாளர் : இன்று என்ன பாடல் பாட போகிறீர்கள்? எந்த ராகம்?

M .S .சுப்புலக்ஷ்மி : குறை ஒன்றும் இல்லை . ராகம் சிவரஞ்சனி.

தொகுப்பாளர் : இறைவன் அருள் இருந்தால் குறை ஒன்றும் இல்லை.

M.S.சுப்புலக்ஷ்மி :

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா

குறை ஒன்றும் இல்லை கண்ணா

குறை ஒன்றும் இல்லை கோவிந்தா

கண்ணுக்கு தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா

கண்ணுக்கு தெரியாமல் நின்றாலும் எனக்கு

குறை ஒன்றும் இல்லை மறை மூர்த்தி கண்ணா

வேண்டியதை தந்திட வெங்கடேசன் நின்றிருக்க

வேண்டியது வேறில்லை மறை மூர்த்தி கண்ணா

மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

வணக்கம்.

தொகுப்பாளர் : நன்றி



**வினிஷா விஸ்வேஸ்வரன்**

**ஆஸ்டின் தமிழ் பள்ளி,**

**நிலை – 1**

இடம் – **எல்லாளன் (மனுநீதி சோழன்) என்னும் மன்னனின் அரண்மனை**

உறுப்பினர் – **எல்லாளன், அவரின் அமைச்சர்.**

*மனுநீதி சோழன் : அமைச்சரே! அங்கே யார் மணி அடிப்பது?*

*அமைச்சர் : அரசே! அங்கே மணி அடிப்பது ஒரு பசு*

*மனுநீதி சோழன் : என்ன? பசுவா? என் ஆட்சியில் இது வரை யாரும் ஆராய்ச்சி மணியை அடித்ததே இல்லையே! இப்பொழுது ஒரு பசு அடிக்கிறது. உடனே நாம் சென்று என்ன நடந்தது என்று தெரிந்து கொண்வோம், வாருங்கள்.*

*அமைச்சர் : அரசே! நான் விசாரித்ததில், இளவரசர வீதிவிடங்கன் தேரில் சென்ற பொழுது தவறுதலாக இளங்கன்றின் மீது தேரை ஏற்றிவிட்டார். அக்கன்றின் தாய்ப்பசு தங்களிடம் முறையிட வந்திருக்கிறது.*

*மனுநீதி சோழன் : என்ன அமைச்சரே சொல்கிறீர்கள்? இளவரசர் எவ்வளவு தவறு செய்தானா? ஒரு கன்றை கொன்றுவிட்டானா? இதற்கு தக்க தண்டனை தர வேண்டும்.*

*அமைச்சர் : நாம் என்ன செய்தாலும் அக்கன்றுக்கு உயிர் தர முடியாதே அரசே!*


*மனுநீதி சோழன் : ஆம் அமைச்சரே! நாம் என்ன செய்தாலும் அக்கன்றுக்கு உயிர்தர முடியாது. இருந்தாலும் செய்த தவறுக்கு இளவரசனுக்கு தண்டனைத் தர வேண்டும். பாவம் அந்த பசு. கன்றை இழந்து வருந்தும் அப்பசுவை போலவே நானும் என் மகனை இழந்து தவிக்க வேண்டும். அதுவே அக்கன்றிற்கு நான் தரும் நீதி.*

*அமைச்சர்:* ***அரசே! இது என்ன விபரீதம்?***

*மனுநீதி சோழன் : இதுவே என் கடமை. யார் அங்கே!!!! தேரை இளவரசன் மீது செலுத்துங்கள்.*

***மனுநீதி சோழனின் சம நீதியை இவ்வுலகம் இன்றும் என்றும் மறக்காது!***

# நான் போற்றும் தலைவர்



என் பெயர் ஆதிரை! நான் அன்னை தமிழ்க் கல்விக்கழகத்தில் நான்காம் வகுப்பு (தமிழ்) பயில்கிறேன்! நான் கருமவீரர் காமராசரைபற்றி பேசவந்துள்ளேன்!

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்"*

*என்ற குறளிற்க்கேற்ப*

தமிழகத்தின் கல்விக்கண் திறந்த கர்மவீரர் காமராசர் அவர்களே நான் போற்றும் நானிலம் மதிக்கும் பெருந்தலைவர். விருதுநகரிலே திரு குமாரசாமி, சிவகாமி அம்மையார் ஆகியோருக்கு மகனாக பிறந்த திரு காமராசர் பள்ளிக்கல்வியை பாதியிலேயே நிறுத்தி பொதுத்தொண்டில் ஈடுபட்டார். திரு சத்யமூர்த்தி அவர்களை தமது தலைவராக ஏற்று அவர் வழிகாட்டுதலில் சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட்டார். சுதந்திரப் போராட்ட வீரராக தம்மை அர்பணித்துக் கொண்ட திரு காமராசர் அவர்கள் அதற்காக பலமுறை சிறை சென்றார். மகாத்மாகாந்தி தலைமயில் அயராது பாடுபட்ட காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து சுதந்திரத்திற்காக பாடுபட்டார்.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகும் காங்கிரஸ் இயக்கத்தில் பல பதவிகளை வகுத்த காமராசர் 1954-ஆம் ஆண்டு தமிழக முதல்வராக பொறுப்பேற்றார். இவர் முதல்வராக இருந்த காலத்தில் தமிழகத்தை தொழில்திரையில் முதன்மை மாநிலமாக உயர்த்தினார். திருச்சி ஆயுத தொழிற்சாலை, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் ஆகியவை அவர் காலத்தில் நிறுவப்பட்டவையே! மேலும் விவசாயம் சிறக்க பல அணைகள் கட்டி விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தப்பாடுபட்டார்.


குறிப்பாக தாம் அதிகம் படிக்காவிட்டாலும் தமிழ்நாடு குழந்தைகள் நல்ல கல்வியை பெறவேண்டுமென்று ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்ப பாடசாலைகளை உருவாக்கினார். ஏழை குழந்தைகளை பள்ளிக்கு வரவழைக்க பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் எனும் மகத்தான திட்டத்தை செயல்படுத்தினார். இன்று இந்தியா முழுவதிலும் பல மாநிலங்கள் இத்திட்டத்தை செயல் படுத்துகின்றன.

தமிழத்தில் மட்டுமல்லாமல் தேசிய அளவில் சீர்மிகு தலைவராக திகழ்ந்தார். அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இவர் இந்த காலத்தில் இருமுறை இவருக்கு பாரத பிரதமராகும் வாய்ப்பு கிடைத்தது. அதை அவர் ஏற்காமல் திரு லால்பகதூர் சாஸ்திரி அவர்களையும் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களையும் அப்பதவியில் போட்டியின்றி அமர்த்தி தனது தன்னலமற்ற சேவையை உலகரிய செய்தார்.

தமிழக அரசு மதுரை அரசு பல்கலைக்கழகத்துக்கும் சென்னை உள்நாட்டு விமான நிலையத்திற்கும் திரு காமராசர் அவர்களின் நினைவாக அவரின் பெயரிட்டுள்ளது. திரு காமராசர் அவர்கள் 1975-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள் மாரடைப்பால் இயற்கை எய்தினார். அவர் இறந்த தருணத்தில் அவரிடம் 130 ரூபாய், இரண்டு சோடி காலணிகள், நான்கு சட்டைகள் , நான்கு வேஷ்டிகள் மற்றும் சில புத்தகங்கள் மட்டுமே இருந்தன. 1976-ஆம் ஆண்டு இந்திய அரசு அவருக்கு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை அளித்து கவுரவப்படுத்தியது. அவரை பேச மற்றும் எழுத எவ்வளவோ இருக்கின்றன. மேற்கூறிய செய்திகளினாலேயே கருமவீரர் காமராசர் அவர்கள் நான் போற்றும் பெருந்தலைவராவர் .

**ஆதிரை**

# தலைவர் காமராசர்



*"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்*

*செயற்கரிய செய்கலா தார்"*

என்ற வள்ளுவரின் சொல்லுக்கு ஏற்ப நல்ல செயல்களை வெற்றியுடன் செய்து செயல் வீரர் என்றும் கர்மவீரர் என்றும் அழைக்கப்படும் காமராஜரே என் மனம் கவர்ந்த பெரும் தலைவர். அவரைப் பற்றி சில வார்த்தைகள் பேசப் போகிறேன். காமராஜர் 1903-ஆம் ஆண்டு ஜூலை மாதம் விருதுநகரில் பிறந்தார். தந்தையின் மறைவால் இளம் வயதிலேயே கல்வியை இழந்துவிட்டார் ஆனாலும் கல்வியின் சிறப்பை நன்கு அறிந்திருந்தார்.

**"விளையும் பயிர் முளையிலேயே தெரியும்"** என்னும் பழமொழிக்கு ஏற்ப செய்தித்தாள்கள் மூலமாகவும் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும் தன் அறிவை வளர்த்தார்.

பணப்பையை பார்க்கும் மனிதர்களின் மத்தியில் ஏழைகளின் இரைப்பையை பற்றி யோசித்தார். அதனால் இலவச கல்வி, இலவச மதிய உணவு கொடுத்தார் இந்த ஏழைப்பங்காளர்.

மாடு பிடித்த கைகளை ஏடு பிடிக்க வைத்தார்.

**கற்பதை நிறுத்தும் எவரும் முதியவர் ஆவர். 20 வயதோ, 80 வயதோ யாராயினும் கற்பதை தொடரும் எவரும் இளமையாகத் தான் இருப்பார்கள்.**

இதை நன்கு அறிந்தவர் காமராஜர் அதனால் தான் அவர் முதலமைச்சராக இருந்தபோது, கட்டாயக்கல்வி, இலவசக் கல்வி, மதிய உணவு திட்டம் இன்னும் பல திட்டங்களை கல்விக்காக கொண்டு வந்தார்.

அவரை ஏன்" படிக்காத மேதை" என்கிறோம் தெரியுமா ? எந்த சிக்கலையும் எளிதில் தீர்க்கும் அறிவும் ஆழமான அனுபவ அறிவும் உள்ளவர். பாடப்புத்தகத்தில் புவியியல் படிக்கவில்லை என்றாலும் எத்தனை ஏரி குளங்கள் உள்ளன, அவற்றை எப்படி விவசாயத்திற்கு பயன்படுத்தலாம் என்பதை நன்கு அறிந்தவர். அதனால்தான் "படிக்காத மேதை" என்கிறோம்.

தேசத்தந்தை காந்தியடிகளின் வழியில் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதால் "கருப்பு காந்தி", "தென்னாட்டு காந்தி" என்றெல்லாம் அழைக்கப்பட்டார். மிகவும் ஏழை குடும்பத்தில் பிறந்து தன் கடும் உழைப்பால் தமிழ்நாட்டின் முதலமைச்சராக 9 ஆண்டுகள் இருந்தார். ஆட்சிக்காலத்தில் பல தலைவர்களை உருவாக்கியதால் "கிங்மேக்கர்" என்றும் அழைக்கப்பட்டார்.

*" காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல மீக்கூறும் மன்னன் நிலம்"*

என்று வள்ளுவர் கூறியது போல காட்சிக்கு எளியர், கடுஞ்சொல் பேசாதவர், கருணை உள்ளம் கொண்டவர் நம் தலைவர் காமராஜர். இந்தப் பெருந்தலைவர் உயர்ந்த பண்புகளுடன் வாழ்நாள் முழுவதும் கதர் ஆடையை மட்டும் அணிந்தார்.

*"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப் படும்"*

என்று வள்ளுவர் கூறியது போல நாட்டு நலன் பற்றியே சிந்தித்து மக்களுக்காகவே வாழ்ந்து, மக்களுக்காகவே பணியாற்றி, மக்களோடு மக்களாக வாழ்ந்த மாமனிதர் நம் தலைவர் காமராஜர். அவரின் ஆட்சிக் காலத்தை தமிழ்நாட்டின் பொற்காலம் என்பர். இந்த பெருந்தலைவர் ஒருபோதும் அரசாங்க வசதிகளை அனுபவிக்காது வாழ்நாள் முழுவதும் வாடகை வீட்டில் வாழ்ந்த " தியாகச் செம்மல்" இவர்.

- சிவகாமியின் செல்வன்
- சிந்தனைச் சிற்பி
- மனிதருள் மாணிக்கம்
- மக்களின் மைந்தன்
- பாரதம் போற்றிய பாரத ரத்னா விருது பெற்ற பெருந்தலைவர்
- சிறார்களின் கரம்பிடித்து கல்வி வரம் கொடுத்த கருணைக்கடல் நம் காமராஜர்.

இந்தப் பெருந்தலைவரின் வாழ்வினை நாம் அனைவரும் படிப்பினையாக கொண்டு வாழ்வோம். வாய்ப்பு கொடுத்த அமெரிக்க தமிழ் கல்விக் கழகத்திற்கு என் மனமார்ந்த நன்றிகள்.

**சாதனா சாதபன்**

# மாசு இல்லா உலகு



முன்னை தோன்றி முப்பொருள் கூறும் மூவர் வளர்த்த தமிழே!

உன்னை பாடி உயர்வு பெறுவேன் உயிரே உணர்வே தமிழே!

என் தாயே தமிழே உன்னை வணங்குகிறேன்!

கற்றறிந்த தமிழ் சான்றோரே, கணித்து தீர்ப்பு வழங்கும் நடுவர்களே, உங்கள் அனைவரையும் அன்னை தமிழால் வணங்கி மகிழ்கிறேன். என் பெயர் ஷ்ரத்தா ஹரிஹரன்.

"மாசு இல்லா உலகு" - இது தான் என் தலைப்பு. மாசில்லா உலகு எனும்பொழுது, ஒவ்வொரு மனிதனும் அகத் தூய்மையுடன், தன்னை சுற்றியுள்ள சூழலையும் தூய்மையாக வைத்துக் கொள்வதை குறிப்பிடலாம்.

***அகத்தூய்மை -***

*"மனத்துக்கண் மாசிலன் ஆதல், அனைத்தறன்*

*ஆகுல நீர பிற"*

என்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர். இதன் பொருள் - தன் மனதிற்கு மாசு இல்லை என்று தெறிந்தால் அதுவே அனைத்திலும் சிறந்த அறம். மற்ற அனைத்தும் தேவையில்லாத செல்வங்களே..!

புற வாழ்க்கையை மேன்படுத்துவதை விட அக வாழ்க்கையை மேன்படுத்துவது மிக அவசியம். சிறு வயதிலேயே அறத்தை விதைத்தால் வாழ்வு உயர்வு பெறும்.

மாசு இல்லாத உலகம் படைக்க மிக முக்கியமான ஒன்று, மனிதர்கள் நாம் அனைவரும் கோபம், பொறாமை, வெறுப்பு இவற்றை அகற்றி தூய்மையான மனதோடு வாழ்வது.

"இதயத்தில் நீதி இருக்கும் இடத்தில்
குணத்திலும் அழகு இருக்கும்.

குணத்தில் அழகு இருந்தால்
வீட்டில் ஒற்றுமை இருக்கும்.
வீட்டில் நல்லிணக்கம் இருந்தால்,
நாட்டில் ஒழுங்கு இருக்கும்.
நாட்டில் ஒழுங்கு இருந்தால்,
உலகில் அமைதி நிலவும்"

என்று கூறினார் திரு.அப்துல் கலாம் அவர்கள்.

"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்றார் திருவள்ளுவர். உடல் தூய்மை நீரால் அமைவதை போல் உள்ளத்தூய்மை வாய்மையால் ஏற்படும்.
நம் மனதின் கண் மாசு அகல என்ன வழி?



பிறர்க்கு தீங்கு நினைக்காமல், அடுத்தவர் வெற்றி கண்டு பொறாமை கொள்ளாமல், பிறரையும் நம்மை போல் கருதி, பணம், பதவி இவற்றுக்கு ஆசை கொள்ளாமல், உழைப்பு, உண்மை, நேர்மை இவற்றின் மீது நம்பிக்கை வைத்து,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

என்று பாடிய நம் கணியன் பூங்குன்றனார் சொல்லும் மனித நேய வழி நின்று வாழ்ந்தால் நம் மனதின் கண் உள்ள மாசு அகலும்.

நல்ல தனி மனித ஒழுக்கம் உள்ள மனிதர்கள் கொண்ட சமுதாயம், கண்டிப்பாக பிறர் நலம் பேணும் சமுதாயமாக இருக்கும்.

பூமி, மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகள் பறவைகள், பூச்சிகள், செடிகொடிகள் ஆகிய அனைத்திற்கும் சொந்தமானது.

நாம் வாழ்வதற்கு, சுவாசிக்க தூய்மையான காற்று, தூய்மையான குடிநீர் சேமித்து வைப்பது தான் நம் முதற்க்கடமை. அதுவே நமது சொத்து. மரங்களை வளர்த்து, நெகிழிக்கழிவு பயன்படுத்துவதை தவிர்த்து, பழையன மறுபயன்பாடாக்கி, அகத்தாலும் புறத்தாலும் "மாசில்லா உலகத்தை உருவாக்குவோம்".
நெகிழியற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!!

பழமையும், பசுமையும், பண்பையும் பேணிக்காத்தலே பார்மக்களின் புலமையாக வேண்டும், என்று கூறி வாய்ப்பு அளித்த அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகிறேன்.
ஷரத்தா ஹரிஹரன்

# மாசு இல்லா உலகு



**முன்னுரை :**

மனிதர்களாகிய நமக்கு இவ்வுலகில் கிடைத்த மிகப்பெரிய பரிசு இயற்கை. இயற்கை என்பது காடுகள், கடல்கள், நிலப்பரப்புகள், கனிமங்கள், எரிபொருட்கள் எனப் பல வளங்களைக் கொண்டுள்ளது.

இந்த இயற்கைச் சூழலில் பல்வேறு உயிரினங்கள், மனிதர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கான நுண்ணுயிர்களும் வாழ்ந்து வருகின்றன. இயற்கையின் அருமையான வளங்களானது மனிதர்களின் நடவடிக்கைகளால் மாசடைகின்றன.

'மாசு' என்றால் சுற்றுப்புறச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் பொருட்களை சுற்றுப்புறத்தில் வெளியிடுவதாகும். பொதுவாக மாசுபடுதலை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

- நிலம் மாசுபாடு
- நீர் மாசுபாடு
- காற்று மாசுபாடு
- ஒலி மாசுபாடு

**நிலம் மாசுபாடு :**

*'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை'*

உழவுத்தொழிலே உலகில் சிறந்தது என்கிறார் வள்ளுவர். இயற்கையின் நில வளத்தில் இருந்து தான், உயிர் இனங்களுக்கு தேவையான உணவுப் பொருட்கள் கிடைக்கும். இந்த நிலமானது, இரசாயன உரங்கள், மண் அரிப்பு, மாசு படிந்த நீர், தொழிற்சாலைக் கழிவுகள் ஆகியவற்றால் சேதமடைகின்றன.

இதனைத் தடுக்க இயற்கை உரங்களைப் பயன்படுத்த வேண்டும். மண் அரிப்பைத் தடுக்க, மண் கட்டமைப்புத் தாவரங்கள் மற்றும் புற்கள் வளர்க்க வேண்டும். குப்பைகளை நில வளத்தில் கொட்டக் கூடாது. விவசாயம் பாதுகாக்கப்பட வேண்டும்.

**நீர் மாசுபாடு :**

**'நீரின்றி அமையாது உலகு'** என்பது வள்ளுவரின் கூற்று. நீர் மாசடைய முக்கியக் காரணம் தொழிற்சாலை மற்றும் வீட்டுக் கழிவுகள் குளம், குட்டை, ஏரி போன்ற நீர்நிலைகளில் கலப்பதாலும், குப்பைகளை நீர் நிலைகளில்

# மாசு இல்லா உலகு

கொட்டுவதாலும், எண்ணெய்க் கசிவினாலும் ஏற்படுகிறது. இதனால், மனிதர்களுக்கு பல்வேறு நோய்கள் ஏற்படும். நீர் வாழ் உயிரினங்களும் பாதிப்படையும்.



இதனைத் தடுக்க குப்பைகளை நீர் நிலைகளில் கொட்டக் கூடாது. நெகிழிப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும். தொழிற்சாலைக் கழிவுகள் சரியான முறையில் சுத்தீகரிக்கப்பட வேண்டும். நீரினை சேமிக்க வேண்டும். நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும். 'சிறு துளி பெரு வெள்ளம்' அல்லவா!

**காற்று மாசுபாடு :**

உயிரினம் வாழ்வதற்கு காற்று மண்டலம் தேவை. இதில் இருந்து தான் நாம் உயிர் வாழ பிராண வாயு கிடைக்கின்றது. இந்தக் காற்றானது, குப்பைகளை எரிப்பதாலும், திடக் கழிவுகளாலும், வாகனப் புகையினாலும், அணுசக்தி வெளியாவதாலும் ஏற்படுகிறது. இதனால், உலக வெப்பமயமாதல், அமில மழை, ஓசோன் படல சேதம், மனித உடல் சீர்கேடு போன்ற விளைவுகள் ஏற்படும்.

காற்று மாசுபாட்டைத் தடுக்க, குப்பைகளை எரிக்கக் கூடாது. பட்டாசுகளைத் தவிர்க்க வேண்டும். காற்று மாசின் அளவைக் கண்காணிக்க வேண்டும். காற்று மாசுக்கான மூலப் பொருட்களை அறிவியல் ரீதியில் கண்டறிந்து குறைத்தல் வேண்டும். மரங்களை வெட்டக் கூடாது. மரங்களை வளர்க்க வேண்டும்.

**ஒலி மாசுபாடு :**

அதிக சத்தத்தினால் மனிதனுக்கு ஏற்படும் மனச்சோர்வையே ஒலி மாசுபாடு என்கிறோம். இதனால், தலைவலி, காதுகேளாமை, சமூக இரைச்சல் போன்றவை ஏற்படும். பறவைகளும், விலங்குகளும் பாதிப்படையும்.இதனைத் தடுக்க, பொது இடங்களில் ஒலி கடத்தாப் பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். குடியிருப்பு கட்டமைப்பை ஒலித்தடையைக் கொண்டு அமைக்க வேண்டும். தனி மனித அக்கறை வேண்டும்.

**முடிவுரை :**

இதுவரை, மாசு என்றால் என்ன என்பதையும், மாசுபடுதல் வகைகளையும், தடுக்கும் முறைகளையும் அறிந்தோம். நாம் செய்யும் எந்த ஒரு செயலும் சுற்றுச் சூழலை பாதிக்காமல் செய்து, நம் வருங்கால சந்ததியிடம் ஒப்படைப்பது நம் அனைவரின் கடமையாகும்.

*' மரம் நடுவோம்*
*மழை பெறுவோம்*
*மாசில்லா உலகு உருவாக்குவோம்*
*மனித குலம் காப்போம்'*

**பிரதன்யா**



## மாசில்லாத உலகம்

இவ்வுலகம் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களினால் ஆனது. இவை இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு உயிர்களோடும் பின்னிப்பிணைந்து உள்ளன. இன்று நாகரீக வளர்ச்சி என்ற பெயரில் பூமி மாசுபடுவதற்கு மனிதன் முக்கிய காரணமாக உள்ளான். பெருகி வரும் மக்கள் தொகையால் மனிதன் காட்டை அழித்து நாட்டை உருவாக்குகிறான். அதனால் மழை மிகவும் குறைந்து விட்டது. பருவநிலை மாற்றத்தால் பூமியின் வெப்பம் அதிகரித்து வருகிறது. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் நிலவறட்சி, காட்டுத்தீ, பனிக்கட்டி உருகுதல், கடல் மட்டம் அதிகரித்தல் போன்றவை ஏற்படுகின்றது. நீர் நிலைகளில் குப்பைகளைப் போடுவதால் பல உயிரினங்களுக்குப் பாதிப்பு ஏற்படுகின்றது. நிலம் மாசு, நீர் மாசு, காற்று மாசு, விண்வெளியில் கூட மாசு வந்துவிட்டது.

ஒரு புறம், மாசுவைக் கட்டுப்படுத்தி சுத்தமான செழிப்பான நாடுகளாக டென்மார்க், சுவிட்சர்லாந்து, பின்லாந்து போன்ற நாடுகள் உள்ளன. மறுபுறம் எத்தியோப்பியா, சோமாலியா போன்ற நாடுகளில் உணவுப் பற்றாக்குறை, தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இவ்வுலகில் 10 கோடி டன் உணவு வீணாக்கப்படுகின்றது. சுமார் ஒரு லட்சம் கோடி கேலன்கள் தண்ணீர் வீணாக்கப்படுகின்றது .


இன்று குடிக்கும் குடிநீரைக் கூட காசு கொடுத்து வாங்குகிறோம். எதிர்காலத்தில் நாம் சுவாசிக்கும் பிராணவாயுவைக் கூட காசு கொடுத்து வாங்கும் நிலை உருவாகலாம். அதற்குமுன் நாம் விழித்துக்கொள்வோம்!

நம்மால் மாசுபடுகின்ற பூமியை யார் தான் சரி செய்வது? நாம் தான் சரி செய்ய வேண்டும். அரசாங்கத்துடன் சேர்ந்து, நீங்கள், நான் என ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும்.

மாசுவைக் கட்டுபடுத்த மூன்று முறைகளைக் கட்டயமாகச் செய்ய வேண்டும்.

- மறுசுழற்சி முறை
- மீண்டும் பயன்படுத்தும் முறை
- பயன்பாட்டைக் குறைத்தல் முறை

**"கூழானாலும் குளித்துக் குடி",**
**"கந்தையானாலும் கசக்கி கட்டு"**
என்ற பழமொழிகளும்



***"புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"***

என்ற வள்ளுவரின் குறளும், நாம் சுத்தமாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. நாம் நமது சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். மக்கும் குப்பை, மக்காத குப்பை எனப் பிரித்து குப்பைத் தொட்டியில் போட வேண்டும். நெகிழிப் பொருட்கள் மக்குவதற்கு ஆயிரம் ஆண்டுகள் ஆகுமாம்! அதனால் அவற்றைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும். மழை நீர் சேமிப்புத் திட்டத்தை ஒவ்வொரு வீட்டிலும் அமைக்க வேண்டும். மரம் வளர்த்தால் தான் மழை பெருகும். பிராணவாயுவும் அதிகரிக்கும். அதனால் வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்.

***"கிளி வளர்த்தேன் - பறந்துவிட்டது
அணில் வளர்த்தேன் - ஓடிவிட்டது
மரம் வளர்த்தேன் - இரண்டும் திரும்பி வந்துவிட்டன"***

இது அப்துல் கலாம் அவர்கள் மரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி கூறிய கவிதை.

தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை, ரசாயனக் கழிவுகள் ஆகியவற்றால் ஏற்படும் மாசுவைக்குறைக்க தொழிற்சாலைகள் விதிமுறைகளைக் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும். இருசக்கர மோட்டார் வாகனங்கள், மகிழுந்துகள் அடிக்கடிப் பயன்படுத்தாமல் மிதிவண்டி, பொதுப்பேருந்துகளைப் பயன்படுத்தலாம்.

இதனால் சுமார் ஒரு கோடி டன் கரியமில வாயு வெளியேறுவதைத் தடுத்து பூமியின் வெப்பத்தை ஆண்டுதோறும் குறைக்கலாம். அவசியம் இல்லாத நேரத்தில் மின்விசிறி, மின்விளக்கு, குளிரூட்டி, தொலைக்காட்சி போன்றவற்றை அணைத்து மின்சாரத்தை சேமிக்கலாம். சூரிய பலகம் அமைத்து சூரிய ஒளி சக்தியை மின்சாரமாக மாற்றிப் பயன்படுத்தலாம்.

பல நாடுகளில் விழிப்புணர்வு ஏற்பட்டு மாசுவை குறைக்க முயற்சி செய்து வருகிறார்கள். சீனா, பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் மனிதனால் உருவாக்கப்பட்ட காடுகளை உருவாக்கி உள்ளனர். விண்வெளியில் ராக்கெட், செயற்கைக்கோள் போன்றவற்றின் சுமார் 17 கோடி உதிரி பாகங்கள் விண்வெளி குப்பைகளாக மிதக்கின்றன. அமெரிக்க - ஐரோப்பிய ஆராய்ச்சி நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டில் அவற்றை அகற்றுவதற்கான முயற்சிகளை செய்து வருகின்றன. இவ்வாறு நாம் செய்யும் முயற்சிகள் மாசில்லாத உலகை உருவாக்க துணை புரியும். "**முயன்றால் முடியாதது எதுவும் இல்லை**".

***இயற்கையைக் காப்போம்!
எதிர்காலம் சிறக்க வழி செய்வோம்!***

*நன்றி! வணக்கம்!*

- **கீத்திகா இரத்தினகுமார்**

# மாசு இல்லா உலகு




**"தேடிச் சோறுநிதந் தின்று — பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்**
**வாடித் துன்பமிக உழன்று — பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து — நரை**
**கூடிக் கிழப்பருவ மெய்தி — கொடுங்**
**கூற்றுக் கிரையெனப் பின்மாயும் — பல**
**வேடிக்கை மனிதரைப் போலே — நான்**
**வீழ்வே னன்றுநினைத் தாயோ?"**

என்ற பாரதியின் வரிகளை முன் வைத்து கடல் கடந்தும் மணக்கும் என் தமிழுக்கும், ஆன்றோர் அனைவருக்கும்

எனது முதற்கண் வணக்கம். நான் இங்கு என்னை கவர்ந்த தலைவரை பற்றி

பேசப்போகிறேன், அவர்தான் வா.ஊ.சி ஐயா. இவருடைய முழுப்பெயர்

வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை. இவரைநான் ஏன்

தேர்ந்தெடுத்தேன் என்றால், இவர் தமிழன் என்ற சொல்லுக்கு பெருமை

சேர்த்தவர் மற்றும் இந்திய தேசிய வரலாற்றில் ஒரு மாமனிதர்.

இவர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம் எனும் ஊரில் 1872 ஆம்

ஆண்டு செப்டம்பர் 5 இல்பிறந்தார். இவர் தந்தை உலகநாதன, தாய் பரமாயி

அம்மாள், இவருடைய தந்தை ஒரு வழக்கறிஞர். இவர் பணக்கார குடும்பத்தில்

பிறந்து வளர்ந்தவர்.
திண்ணைப் பள்ளியில் தான் ஆரம்பக் கல்வி பயின்றார்.
பின்பு சட்டக்கல்லூரி பயின்றார்.
இவர் ஒரு வழக்கறிஞராக தான் தன்

தொழிலை தொடங்கினார். இவர் அப்பொழுதே எளிய மக்களுக்கு பணம்

வாங்காமல் வாதிடுவாராம். இவருடைய நல்ல நண்பர் சுப்பிரமணிய சிவா.

இவர் அவ்வபோது சென்னைக்கு செல்வது வழக்கமாம். இவர் அப்பொழுது பாரதியை சந்தித்தார். இவர்கள் இரண்டு பேரும் நல்ல நண்பர்களாக இருந்தனர். இவர்கள் இரண்டு பேரும் கடற்கரையில் உட்கார்ந்து நாடு ,சுதந்திரம், விடுதலை பற்றிதான் பேசுவார்களாம். வ.ஊ.சி ஐயா பாரதிக்கு



மூத்தவராக இருந்ததினால் பாரதி இவரை மாமா என்று அழைப்பாராம்.

பாரதியின் பாடல்கள் இவரை நாட்டு விடுதலைக்கு உழைத்த தூண்டியது. அதனால் வ.ஊ.சி ஐயா காங்கிரஸ் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு நாட்டு விடுதலைக்கு உழைக்கத் தொடங்கினார். அப்பொழுது மக்கள் எல்லாம் 12 மணி நேரம் ஓய்வில்லாமல் வேலை செய்வதைப் பார்த்து ஒன்பது நாள் போராட்டம் செய்து அதில் வெற்றியும் பெற்றார். அப்பொழுது அவருக்கு ஒரு யோசனை வந்தது. கப்பலால் வந்த ஆங்கிலேயரை கப்பலால் தான் விரட்ட வேண்டும் என்று யோசித்தார். இதற்காக தன் சொத்தை விற்று நிதி திரட்டி மும்பை சென்றார். மும்பை செல்வதற்கு முன் 'கப்பலோடு தான் வருவேன்; இல்லையேல் கப்பலில் வீழ்ந்து இருப்பேன்' என்று கூறி சென்றார். மும்பையில் பல சிரமங்களுக்கு பின் இரண்டு கப்பல்களோடு தூத்துக்குடி துறைமுகத்தை வந்து அடைந்தார். மக்களெல்லாம் அதைப் பார்த்து அவரைப் பாராட்டினார்கள்.

இப்பொழுது நான் பாரதியின் வரிகளை முன்வைக்கிறேன்.

**"வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம் - அடி**
**மேலைக் கடல்முழுதுங் கப்பல்விடுவோம்**
**பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்கு வோம் -எங்கள்**
**பாரத தேசமென்று தோள்கொட்டுவோம் -எங்கள்**
**பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்."**

1906-ஆம் ஆண்டு 'சுதேசி கப்பல்' இயக்கத்தை தொடங்கி, தூத்துக்குடி மற்றும் இலங்கைக்கு இடையில் ஒரு கப்பல் போக்குவரத்தை அதன்மூலம் தொடங்கினார். இவருடைய



போக்குவரத்து ஆங்கிலேயருக்கு ஒரு சவாலாக இருந்ததினால் அவரை கைது செய்தனர். இதனால்தான் இவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் 'என்ற பெயர் வந்தது. இவரை கைது செய்ததற்காக மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராட்டம் செய்தனர். இதுதான் முதன்முதலில் நாட்டில் கடையடைப்பு போராட்டம். இவரை சிறையில் வைத்து மிகப்பெரிய கொடுமை செய்தனர்; செக்கிழுக்க வைத்தனர். அதனால் தான் இவருக்கு 'செக்கிழுத்த செம்மல்' என்ற பெயர் வந்தது. இவர் 1912ல் சிறையிலிருந்து வெளியே வந்தார். அதனால் இவருக்கு

'

பாரிஸ்டர்' பட்டம் பறிபோனது. மேலும் இவர் சென்னையில் எண்ணெய் மற்றும் அரிசி விற்று தன்னுடைய வாழ்க்கையை நடத்தினார். இவர் 1936 ஆம் ஆண்டு நவம்பர் 18 இந்த மண்ணுக்குச் சொந்தமானார்.

"ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து."

என்ற குறளுக்கு இலக்கணம் இவர்தான்.


இவரைப் போற்றும் வகையில் இவரது வீட்டை நூலகமாக மாற்றியுள்ளது. இவருடைய பெயரை தூத்துக்குடி துறைமுகத்திற்கு வைத்துள்ளனர். இவர் இழுத்த செக்கை கோவை மத்திய சிறையில் வைத்துள்ளனர்.

வா உ சி ஐயாவை போற்றும் வகையில் அவரைப் போன்று நாமும் வாழ்வோம் என்று கூறி எனது உரைக்கு முற்றுப்புள்ளி வைத்து கொள்கிறேன். நன்றி !

**வணக்கம்.**

**மிதுனா**

# என்னை கவர்ந்த தலைவர்



"செயற்கரிய செய்வார் பெரியர்" *

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்பச் செயற்கரிய செயல்கள் புரிந்து "செயல் வீரர்" என்று பாராட்டப்படும் "காமராஜர்" அவர்களே "என்னை கவர்ந்த தலைவர்" ஆவார்.

காமராஜர் அவர்கள்

- உயர்பண்புகளின் உறைவிடமாய் வாழ்ந்தவர்.
- காட்சிக்கு எளியவர்;
- சுருக்கமாய்ப் பேசுபவர்;
- செயலில் வீரர்;

இப்படி அவரது பல உயரிய பண்புகளால் "என்னை கவர்ந்த தலைவர்"-ஆக **காமராஜர்** ஐயா இருக்கிறார்!

அவர் ஏழைகளின் கல்விக்கண் திறந்தவர்.

எப்படி ஒரு ஏழை பெற்றோர் தான் படிக்காவிட்டாலும் தன் பிள்ளைகள் எப்படியாவது படிக்க வேண்டும்

என்று துடிப்பார்களோ... அதேபோல நம் தமிழ்நாட்டு ஏழை குழந்தைகள் எப்படியேனும் கல்வி கற்கவேண்டும்

என்று குறிக்கோளுடன் இருந்தார், அதற்காக எத்தனை எத்தனை புது முயற்சிகள்..

எத்தனை எத்தனை புது சட்டங்கள் கொண்டு வந்தார்.

ஆம்..

* அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றினார்.

* மூடப்பட்டிருந்த ஆறாயிரம் தொடக்கப்பள்ளிகளை திறக்க ஆணையிட்டார்

பள்ளி செல்லும் குழந்தைகள் உடையில் ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது .. அதனால் "சீருடை"த்திட்டத்தை அறிமுகம் செய்தார்

* மாணவர்கள் பசியின்றிப் படிக்க "மதிய உணவுத்" திட்டத்தையும் கொண்டு வந்தார்.

எத்தனை எத்தனை புது திட்டங்கள்... எத்தனை எத்தனை புது சட்டங்கள்...

அதனால் தான் இவரை மக்கள்..

**செயல் வீரர்**, **கர்மவீரர்** காமராஜர் என்று எண்ணற்ற அடைமொழிகள் கொண்டு அழைத்தனர்.

அது மட்டுமா.. தான் ஒரு சிறந்த தலைவர் மட்டுமில்லாமல்

பல தலைவர்களை உருவாக்கியதால் அவரை

"**பெருந்தலைவர் காமராஜர்**" என்றும் அழைக்கப்பட்டார்.

நேரம் கிடைக்கும் போது நிறைய புத்தகங்கள்

## என்னை கவர்ந்த தலைவர்



வந்தார்.

இருப்பினும்

- செல்வ வாழ்க்கை நாடாமல் வாடகை வீட்டிலே வாழ்ந்தவர்.

இப்படி, தமக்கென வாழாமல் நாட்டுக்காக வாழ்ந்த தியாகி;

காமராஜர் - அவர் கூறிய பொன்மொழி ஒன்று - எனக்கு மிகவும் பிடிக்கும் !!

அது என்னவென்றால்,

"எல்லோருடைய வாழ்க்கையும் வரலாறு ஆவதில்லை.. வரலாறு ஆனவர்கள் யாரும் தனக்காக வாழ்ந்ததில்லை.. "

என்று தான் கூறியது போல் வாழ்ந்து காட்டியவர் நம் காமராஜர்.

இத்தனை உயரிய பண்புகளால் "**என்னை கவர்ந்த தலைவர்**"-ஆக காமராஜர் ஐயா இருக்கிறார் !

படிப்பார்.

இதனால் பட்டப்படிப்பு படிக்காவிட்டாலும்.. அவர் ஒரு "**படிக்காத மேதை**" எனப் போற்றப்படுகிறார்.

"முடியாது.. அது அவரது அகராதியில் கிடையாது!"

ஆம்...

காமராஜர் கொண்டு வந்துள்ள தொழில் வளர்ச்சி - கேட்டாலே மெய் சிலிர்க்க வைக்கிறது -

- வைகை அணை, மணிமுத்தாறு அணை என பல நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றினார்.
- கிண்டி தொழிற்பேட்டை, அம்பத்தூர் தொழிற்பேட்டை என பல தொழிற்சாலைகளை தொடங்கினார்.
- நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் மற்றும்
- மேட்டூர் காகிதத் தொழிற்சாலைகளை கொண்டு

நிறைவாக ஒன்று கூற விரும்புகிறேன்..

"நாடு உனக்கு என்ன செய்தது என்று கேட்காதே; நாட்டிற்கு நீ என்ன செய்தாய் என்று கேள்."

- என்று ஜான் கென்னடி கூறியது போல்..

நாமும்,

காமராஜர் அவர்களின் பண்புகளையும் சாதனைகளையும்

படித்தும் கேட்டும் நின்று விடாமல்

நாமும் காமராஜர் போல் ஏதேனும் ஒரு துறையில்


நம் நாட்டின் நலத்திற்காக உழைப்போம்

என்ற வேண்டுகோளுடன்

வாய்பளித்தமைக்கு "நன்றி" கூறி

விடை பெறுகிறேன் ....

# பெரிதினும் பெரிது கேள்



யாரிடம் கேட்பது, காணி நிலம் வேண்டும் என்று கேட்ட பாரதி, ஏன் பெரிதாய் பல வேலி நிலம் வேண்டும் என்று கேட்கவில்லை. பத்து பதினைந்து தென்னை மரம் வேண்டும் என்று கேட்டவன் ஏன் பெரிய தோப்பாக வேண்டும் என்று கேட்கவில்லை.ஆக பாரதி, பெரிதினும் பெரிது கேள் என்று சொன்னது, சொல்வதைக் கேள், கற்றவர் சொல்வதைக் கேள், சான்றோர் உரை கேள் என்பதே. கேள்வியால் அடைகின்ற அறிவே செல்வங்களுள் சிறந்த செல்வம் ஆகும். அந்தக் கேள்விச் செல்வம், பிற செல்வங்களுக்குள் எல்லாம் முதன்மையானது ஆகும். செவிக்கு உணவு இல்லாத பொழுது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என்பது நமது ஐயன் வாக்கு.செவியுணவு ஆகிய கேள்வியை உடையவர் இவ்வுலகில் இருப்பாராயின், வானுலகத்துத் தேவர்களுக்கு ஒப்பானவர் என்கிறார் வள்ளுவர். அதனால் கேள், பெரிதாய் கேள் ,தான் முயன்று கற்கவில்லை என்றாலும் கற்றவரிடம் கேட்டாவது அறிவு பெற வேண்டும்.அது ஒருவன் தளர்ச்சியடையும் போது ஊன்றுகோல் போல் உதவும். அதனால் கேள் பெரிதினும் பெரிதாய் கேள்,நல்லவற்றை கேள்.

*“எனைத்தானும் நல்லவை கேட்க*
*அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்”*

கேள், பெரிதாய் கேள், கேள்வியால் உன் செவிகள் துளைக்கப்படும் அளவு பெரிதாய் கேள்.


*“கேட்பினுங் கேளாத் தகையவே*
*கேள்வியால்*
*தோட்கப் படாத செவி”*

நுண்மையான கேள்வி அறிவைப் பெறாதவர்கள்,தாம் வணக்கமாக பேசும் வாயினர் ஆகுதல் அருமையே. கேள்வியறிவு பெற்றவர்கள் பணிவாக பேசுவார்கள்.நல்ல ஒழுக்கம் உடையவரது வாய்ச்சொற்கள் வழுக்கும் சேற்றில் வழுக்காமல் செல்ல உதவும் ஊன்றுகோல் போல ஒருவனுக்கு எப்போதும் உதவியாக விளங்கும். ஆதனால் நல்லவற்றைக் கேள்,பெரிதாய் கேள், பெரிதினும் பெரிதாய் கேள்.

கற்றலின் கேட்டலே நன்று என்பது நமது பழமொழி. நூல் அறிவை விட கேட்டறிதலே, சிறந்தது என்கிறது நன்னூல் சூத்திரம். அதனால் கேள், பெரிதாய் கேள், பெரிதினும் பெரிதாய் கேள்.

***-சாய்ராமன்***

# மாசற்ற உலகு



நீங்களே யோசித்துப் பாருங்கள், இந்த மனித சமுதாயத்தினால் உருவாக்கப்படும் மாசு கடலில் மட்டுமே தங்குவதில்லை. அது நாம் உண்ணும் உணவிலும், குடிக்கின்ற நீரிலும், சாப்பிடும் உப்பிலும் திரும்ப நம்மிடம் வந்து சேர்கிறது. இது மனிதர்களை மட்டுமே பாதிப்பதில்லை, மற்ற கடல் உயிரினங்களையும் விலங்குகளையும் சேர்த்தே பாதிக்கின்றது.

இந்த வேளையில் இயற்கை வளத்தின் பெருமையைப் பற்றி வள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பே என்ன சொல்லி இருக்கின்றார் எனத் தெரியுமா?

*நீரின்றி அமையாது உலகெனின்*
*யார்யார்க்கும்*
*வானின்று அமையாது ஒழுக்கு*

அனைவருக்கும் வணக்கம்! என் பெயர் இனியா பதிக்குமார். நான் செர்ரிடோஸ் தமிழ் பள்ளியில் நிலை நான்கு படிக்கிறேன். நான் இன்று மாசில்லா உலகைப் பற்றி பேச வந்துள்ளேன்.

நாம் அனைவரும் மாசில்லா உலகெனில் நீர் மாசு பற்றித் தான் முதலில் யோசிப்போம். ஆனால் நீர் மாசு மட்டுமில்லை ஒலி, காற்று, மற்றும் நில மாசும் இந்த பூமியை சிதைத்து வருகின்றது.

இப்பொழுது நாம் நீர் மாசைப் பற்றி விரிவாகப் பார்ப்போம். நம்மில் பெரும்பாலானோர் நீரில் மற்றும் நிலத்தில் வீசுகின்ற நெகிழிக் கழிவுகள் அனைத்தும் கடலில் சென்று சேர்ந்து, பசுபிக் பெருங்கடலில் பெரும் குப்பைமேடாக இருக்கிறது. அது அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாகாணத்தை விட பெரிய பரப்பளவில் உருவாகி உள்ளது. இது ஒரு சிறிய உதாரணம் தான்.

## விளக்கம்:

நீர் இல்லாமல் வாழ்க்கை அமையாது. அதைப்போல நீரைத் தரும் வான் மழை இல்லை என்றால் ஒழுக்கம் அமையாது.

ஆகவே, அப்படிப்பட்ட நீரை நாம் மாசு படுத்தலாமா?

இயற்கை வளத்தை காப்பதை பற்றி நான் ஒரு வழி சொல்கிறேன். நமக்கு மூன்று வண்ணங்களில் குப்பைத் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை பிரித்துப் போட வேண்டும். இப்படி செய்வதால் குப்பைகள் தேவையற்ற இடங்களுக்கு செல்வதை நாம் முடிந்த அளவு தவிர்க்கலாம்.

இன்னொரு வழி ஆங்கில எழுத்தான RRR முறையை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். Reduce- முடிந்த அளவு ஒரு பொருளை குறைத்து



பயன்படுத்துதல். உதாரணமாக, ஒரு நிகழ்ச்சிக்கு சென்றால் தண்ணீர் குவளையில் குடிப்பவரின் பெயரை எழுதி பயன்படுத்துங்கள்.

*Reuse-* திரும்ப பயன்படுத்துதல். ஒரு பொருளை உடனே குப்பைத் தொட்டியில் எரியாமல் அதனை மறு உபயோகப்படுத்தும் வாய்ப்பு இருந்தால் திரும்பவும் உபயோகப்படுத்துங்கள்.

*Recycle-* மறுசுழற்சி. நெகிழிகள், காகிதங்கள், மற்றும் அட்டைகளை பிரித்து மறுசுழற்சி குப்பை தொட்டியில் போட வேண்டும். இப்படி செய்தோம் என்றால் நாம் மாசுக்களை பெரும்பாலான அளவு குறைக்கலாம்.

சரி. நமது இளைய தலைமுறையினற்கு மாசில்லா உலகைப் பற்றி எப்படி சொல்லித் தருவது? விடுமுறை காலங்களில் சுற்றுலா செல்லும் பொழுது பொழுதுபோக்கு பூங்கா அதாவது *Theme park* மட்டும் செல்லாமல் தேசிய பூங்காக்களுக்கும் சென்று அங்குள்ள இயற்கை சூழ்நிலைகள், விலங்குகள், பறவைகள் மற்றும் சுத்தமான காற்று போன்றவற்றை அனுபவிக்கும் பொழுது இதனை இப்படியே வைத்து காப்பாற்றுவோம் என்ற எண்ணம் வரும்.


நான், இங்கு கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இயற்கையை எப்படி காத்து மாசற்ற உலகைப் படைப்போம் என்று எனது கருத்துக்களை பதிவிட்டுள்ளேன்.

வாய்ப்பளித்த அனைவருக்கும் மிக்க நன்றி.

**வணக்கம்!**

**இனியா பதிக்குமார்**

# என்னை கவர்ந்த தலைவர் - தந்தை பெரியார்




இங்கு கூடியுள்ள அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அபிராமி கல்யாணசுந்தரம். நான் இல்லினாயில் உள்ள அன்னைத்தமிழ் அகாடமியில் நிலை 3 படிக்கிறேன்.

நான் சமீபத்தில் ஓரிடத்தில் தந்தை பெரியாரை பற்றி பதிவு செய்தேன். அவரைப் பற்றி தெரிந்து கொண்ட போதே அவர் என் உள்ளத்தை கவர்ந்து விட்டார். நம் அ.த.க வின் பேச்சுப்போட்டி தலைப்பான 'என்னை கவர்ந்த தலைவர்' என்று அறிந்த பிறகு நான் எவ்வாறு பெரியாரைப் பற்றி பேசாமல் இருப்பேன்? ஆம் நான் இன்று பேச விருப்பது

தந்தை பெரியாரைப் பற்றி தான்.

பகுத்தறிவுப் பகலவன், தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ், மூட நம்பிக்கைகளை வேரறுத்த வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்பட்டவர்.



வீடு திருந்தினால் தெரு திருந்தும். தெரு திருந்தினால் ஊர் திருந்தும். ஊர் திருந்தினால் நாடு திருந்தும். நாடு திருந்தினால் உலகம் திருந்தும் என்ற கருத்தின் அடிப்படையில் வீட்டோடு நாட்டுக்கு உழைத்தோரும் உண்டு, வீட்டை மறந்து நாட்டுக்கு உழைத்தோரும் உண்டு. அந்த வரிசையில் வீட்டோடு நாட்டுக்கு உழைத்தவர் தான் தந்தை பெரியார்.

பெரியார் செல்வ பெருந்தகை மாளிகையில் பிறந்த செல்வந்தர். அவர் ஏழைகளை மாடியிலிருந்து பார்க்கவில்லை. கீழே இறங்கி வந்து கீழிருந்து பார்த்தார். இந்த பார்வையில் இருந்து தான் அவரது கருத்துகள் பிறந்தன.

தன்னை ஒருபோதும் ஒரு சீர்திருத்தவாதியாக சொல்லிக்கொண்டது இல்லை. தன்னை ஒரு அழிவு வேலைக்காரன் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர். சாதி, மதம், அடிமைத்தனம் இவற்றை அழித்தால்தான் சமத்துவம் பிறக்கும் என்று நம்பினார்.

பெண் உரிமை, சமத்துவம், சமூக நீதி, ஒடுக்கப்பட்டோர் நலன், கருத்துச் சுதந்திரத்தில் நம்பிக்கை என பலவிதங்களில் பெரியாரைப் பார்க்க முடியும்.பெண்ணின் விடுதலைக்காக அவர் போராடியதை அழகான கவிதையில் சொல்லவா? பெண்ணின் விடுதலை அவர்தாடியில் இருந்தது. அதை நீவி விடும் போதெல்லாம் அது நீண்டு கொண்டே இருந்தது.

1938ல் சென்னையில் நடந்த மகளிர் மாநாட்டில் பெண்களால் தான் அவருக்கு பெரியார் என்று புனைப் பெயர் சூட்டப்பட்டது. பெரியார் வாழ்ந்த காலம் 94 ஆண்டுகள். அந்தக் காலகட்டத்தில் தற்போது உள்ள சமூக வலைத்தளங்கள் கிடையாது. தொலைக்காட்சி கிடையாது. வெறும் பத்திரிகைதான். அதன் மூலமும் மேடைப்பேச்சுகள் இன் மூலமும் ஒரு மனிதனின் கருத்துக்கள் இச்சமூகத்தில் இத்தனை பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றால் அது பெரியாரால் மட்டும்தான் முடியும்.

மனிதனை மனிதனாக பார்க்கவிடாமல் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி அதன் மூலம் சுகம் கண்ட சிலரின் அடிவேரினை அசைத்துப் பார்க்க கூடிய திடம் அவரது கருத்தியலுக்கு இருந்தது.

குறிப்பாக பெரியாரின் தனித்துவமே அவர் யார் மீதும் தனது கருத்துக்களை திணித்ததில்லை. இருள் சூழ்ந்த ஒரு சமூகத்தில் அக்கினிக் குஞ்சாக பெரியார் வந்தார். தெற்கில் இருந்து கிளம்பிய பெரியார் எனும் சூரியன்தான் மொத்த இந்தியாவுக்கான சமூக நீதியின் தேவை உணர்த்தியது என்றால் அது தான் சரித்திரம்.

ஒருவேளை பெரியார் இன்று இருந்திருந்தால் அவர் தற்போது உள்ள சமூக வலைத்தளங்கள் மூலம் இந்தியாவுக்கான முகமாக மாறி இருப்பார். இந்தியா முழுவதும் தனது சுயமரியாதை கருத்துக்களை விதைத்து இருப்பார்.


பெரியார் ஒரு வரலாற்று நிகழ்வு அந்த நிகழ்வு யுகத்திற்கு ஒரு முறை தான் நடக்கும். எனவே இந்த யுகத்திற்குள் பெரியார் மேலும் திடமாக தாங்கி பிடிப்போம். அவர் சாதித்ததை, சாதிக்க நினைத்ததில் பாதியையாவது சாதிக்க முயல்வோம்.

**வாய்ப்பிற்கு நன்றி**

**வணக்கம்**

**அபிராமி கல்யாணசுந்தரம்**

# என்னை கவர்ந்த தலைவர் - தந்தை பெரியார்



***பகுத்தறிவு பகலவானம் பார் போற்றும் வேந்தன் !***

***பழுத்த சுயமரியாதை பயிர் விளைத்த வீரன் !***

***மிகுத்து வரும் சாதிகளை எடுத்தெறிந்த மேலோன் !***

***மெல்லியலார் வாழ்வில் ஒளி ஏற்றி வைத்த நல்லோன் !***

ஆம்! நம் தந்தை பெரியார் அவர்கள்.

அவரது கருத்துக்கள் ஒரு நாடு, மொழி, இனம் என்ற ஒரு வட்டத்திற்குள் சுருக்கிவிடமுடியாது. அது உலகிற்கானது ! எக்காலத்திற்கும் ஆனது.

இதுவே என்னை மிகவும் கவர்ந்தது.

அவர் பிறந்த ஈரோடு மண்ணில் நானும் பிறந்தேன் என்கிற பெருமையும், உணரவும் எனக்குள் எப்பொழுதும் உண்டு.

எழுத்து , சொல் , பொருள் , யாப்பு , அணி என்ற படைப்பு இலக்கியங்கள்தான் தமிழ் என்று இருந்த காலத்தில், பகுத்தறிவு என்னும் நான்காம் தமிழையும் நம்மிடம் அறிமுகம் செய்தவர் நம் தந்தை பெரியார்.

கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவு சிந்தனையும், பெண்ணுரிமையமே தாழ்ந்து கிடக்கும் மக்களை எப்பொழுதும் உயர்த்தும் என முழங்கியவர் நம் தந்தை பெரியார் .

மக்களின் மூடநம்பிக்கைகளை களைய கல்வியால் மட்டுமே முடியும் என்பதை நிருபித்து காட்டியவர் தந்தை பெரியார் .

குலக்கல்வி என்னும் மடமையை கொளுத்தி, அனைவருக்கும் சமமான வாய்ப்பு என்னும் நிலைமையை உருவாக்கி இன்றும் தமிழகம் தான் இந்திய நாட்டில் கல்வியில் முதன்மையான மாநிலம் என்கின்ற



பெருமைக்கு வித்திட்டவர் நம் தந்தை பெரியார்.

ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரத்தின் வளர்ச்சி மட்டும்மல்ல.ஒட்டு மொத்த மக்களின் வளர்ச்சியே உண்மையான வளர்ச்சி என முழங்கியவர் தந்தை பெரியார்.

இன்றைய நவீன உலகின் தினசரி தலைப்பு செய்திகளாகும் நிறவெறி மற்றும் இனப் படுகொலைகள் மனதிற்கு மிகவும் வேதனையளிக்கிறது.

***மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு !***

***தீண்டாமை ஒழியவேண்டுமெனில்,***

***சாதி மற்றும் இனவெறி அழியவே வேண்டும் !***

என்பதை மறந்து இருளில் சிக்கி தவிக்கும் இம்மாக்களின் வாழ்வில் ஒளி ஏற்றவே தேவைப் படுகிறார் பெரியார்.

***இருநூறு ஆண்டு குடியரசு !***

***இவ்வுலகின் மிகபெரிய வல்லரசு !***

***ஆனால், ஒரு பெண் அதிபர் ஆவதை***
***ஏதோ ஒன்று தடுக்கிறது !***

இது போன்ற இரும்புக் கதவை உடைத்து எறிந்து , பெண் உரிமையை மீண்டும் நிலைநாட்ட நமக்குள் வேண்டும் பெரியாரின் சிந்தனைகள்.

***வினாக்குறிகளை வைத்தே எழுதிய***
***விளக்கமான கவிதை!***

***பல மூடநம்பிக்கைகளுக்கு முடிவுரை***
***எழுதிய முன்னுரை !***

***இந்த கருஞ்சட்டை மட்டும் தான்***
***கேள்விகளை விதைத்தது !***

***பதில் கூட சொல்ல தெரியாத எம்மக்களை***
***கேள்வி கேட்க வைத்தது !***


வேர்கள் வீழ்ந்தாலும் அவரால் விதைக்கப்பட்ட விதைகள் நாங்கள் !

ஆல் போல் தழைத்து அருகு போல் வேருன்றி, அவரது கருத்துக்களை உலகமெல்லாம் எடுத்து செல்வோம் !!

***நன்றி !!***

***வணக்கம் !!!***

***நிகிலன் ரத்தினகுமார்***



எனை ஈன்ற தந்தைக்கும், தாய்க்கும் மக்கள் இனம் ஈன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால் திணையளவு நலமேனும் கிடைக்குமென்றால் செத்தொழியும் நாள் எனக்குத் திருநாளாகும் எனும் பாரதிதாசனின் வரிகளோடு தொடங்குகிறேன்.

**அறிவுசார் பெரியோர்களுக்கு என் பணிவான வணக்கங்கள்!!!**

கொடுக்கப்பட்ட தலைப்பு **”மாசில்லா உலகு”** இதை வள்ளுவர் அன்றே எப்படி கூறியுள்ளார் என ஆர்வமுடன் அறிய முயன்றேன்.

*நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழில*

*தான்நல்கா தாகி விடின்.*

என்கிறார்.

அதாவது, மேகம் கடலிலிருந்து நீரைக் கொண்டு அதனிடத்திலேயே பெய்யாமல் விடுமானல், பெரிய கடலும் தன் வளம் குன்றிப் போகும் நீரே எல்லா உயிர்களுக்கும் ஆதாரம். வெட்டவெளியில் இருந்தே உலகம் தோன்றியது. அங்கிருந்தே மழை வருவதால் அதை அமிழ்தம் போல இயல்புடையது என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் எங்கே இருக்கிறோம் என்பது முக்கியம்மல்ல எப்படி சிந்திக்கிறோம் என்பதுதான் முக்கியம்.

இச்சிறியவளின் சிற்றறிவிற்கு எட்டியவரையில் இவள் மாசில்லா உலகு எனப் போற்றுவது புகழும் பதவியும் அல்ல. வசதி வாய்ப்புகளும் அல்ல. வானுயரப் பறக்கும் ஆசைகளும் வாய்ப்புகளும் அல்ல. நம் இருத்தலின் காரணிகளான சுவாசிக்க காற்று, குடிக்கத் தண்ணீர், உணவு சமைக்க மண் இவையே ஒட்டுமொத்த உயிர்களுக்கும் பெரிதெனக் கருதுகிறேன். ஆனால், நான் அஞ்சுகிறேன் பின் வரும் சந்ததிகளுக்கு மிஞ்சப் போவது என்ன என்பதனை எண்ணி நான் அஞ்சுகிறேன். ஓசோன் உடைத்து விண்வெளிச் சோதனை, உள்ளிருக்கும் மறைநீரை ஒட்டுமொத்தமாக உறிஞ்சி தொழிற்துறை சாதனைகள், அடுக்குமாடிக் குடியிருப்புகள், அரசாங்கக் கட்டிடங்கள், சர்வகலா சாலைகளுக்கு அடியில் அஸ்தமனமாகிப் போன ஆறுகள், ஏரிகள், குளங்கள் தகவல் தொடர்பின் கண்ணிகள் எங்கும் கருகிப்போன பறவைகளின் கல்லறைகள்.

இறந்த காலத்தின் மிச்சமாய் மிஞ்சியிருக்கும் காடுகளின் குலை அறுக்க எட்டு வழிச்சாலைகள். சோதனை, சாதனை, புரட்சி, வளர்ச்சி இவை பற்றியதான புரிதல்தான் என்ன? ஆறுகளில் அள்ளிப் பருகிய நீரை காசுகொடுத்து



வாங்குவதா? தவறியும் துளிர்த்து விடக்கூடாது என்பதற்காக அடிமர வேரில் கொதி நீரை ஊற்றிவிட்டு குறிரூட்டும் பெட்டியின் துணைகொண்டு உறங்குவதா? இல்லை நிச்சயம் இல்லை.

காற்றின் திசைகொண்டு வானிலை கணித்தவர்கள் நாம் பட்சிகளின் ஓசைகொண்டு பேராபத்துகளை முன்னறிந்தவர்கள் நாம். நமக்கு செயற்கைக்கோள் வேண்டாம். இயற்கையை கணிக்கும் நுண்ணறிவுபோதும். தொழிற்சாலைகள் வேண்டாம். கழிவுநீர் கலக்காத ஆறுகள் போதும். காடுகள் அழித்து அகலச் சாலைகள் வேண்டாம். மரங்களின் அடையில் வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதை போதும். பின்னந்தலை நரம்புகள் அறுந்துபோகும் கணினிசார் வேலைகள் வேண்டாம், நாற்றோடும், களையோடும் விளையாடும் விவசாயம் போதும். இழந்தவற்றையெல்லாம் திருப்பித்தர இயலாவிட்டாலும் பரவாயில்லை. இருப்பவற்றையாவது காப்பாற்றித் தாருங்கள் என்றே வேண்டுகிறேன்.

கடைசித்துளி காற்றும் நஞ்சான பிறகு, கடைசி சொட்டு நீரும் தீர்ந்த பிறகு, கடைசி மரமும் வெட்டப்பட்ட பிறகுதான் தெரியவரும் நாம் இழந்தவை அனைத்தும் பணம் என்ற வெற்றுக் காகிதத்திற்காக என்று. காற்றுக்கும் நீருக்கும் மாற்றுக்கு எங்கே போவோம்? அதிமுக்கியத் தேவை எதுவென்று ஏன் நமக்கு விளங்கவில்லை? நம் கண் எதிரில் அனைத்தும் அசுர வேகத்தில் அழிக்கப்படுகின்றனவே. நாம் ஏன் மௌனம் காக்கிறோம்? கேள்வி கேட்க முடியாத சர்வாதிகாரத்தைவிடவும், கேள்வி கேட்கத் தயங்குகிற ஜனநாயகம் ஆபத்தானது. நஞ்சுகலக்காத காற்று, நெகிழிப் புட்டியில் அடைபடாத நீர், மண் புழுக்கள் வாழுகின்ற மண் இவை நம் உயிரினும் பெரிதல்லவா?

இவற்றை நாம் உயிர் என எண்ணாமல் போனால்!! இவையே பெரிதென்று உணர்ந்து காக்காமல் போனால்!!! மனிதகுலத்தின் கடைசித் தலைமுறை நாமாகவே இருப்போம். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே – அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே – நமக்குப் பின் ஆயிரம் ஆண்டுகள் நம் தலைமுறைகள் வாழ்ந்திருக்கப் போவதும் இந்நாடே.

அரிதினும் அரிது கூறிய அவ்வையின் வழி வந்தவள், உங்களிடம் வேண்டி யாசிக்கிறேன். நாளைய தலைமுறைக்கு மிச்சம் வைப்போம். கொஞ்சம் காற்று, கொஞ்சம் நீர், கையளவு மண், நல்வாய்ப்பிற்கு மிக்க நன்றி!

- **முத்துராஜ் சண்முகம்**

# பெரிதினும் பெரிது கேள்

பெரிதினும் பெரிது கேள் என்றார் பாரதி, அவர் எதை பெரிதாக கேட்கச் சொன்னார்? பொருட்களையா, வீடுகளையா, விளையுயர்ந்த மகிழுந்துகளையா, எத்தனை பெரிதான நிலத்தையோ, வசதிகளையோ பெருக்கினாலும் நமக்கு தேவையானவை என்றும் சில நிலம் தான்.....



பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்கள் என்றார் கண்ணதாசன் அவர்கள்.

ஒரு மனிதனை உயர்த்துவது அவனுடைய சிந்தனை என்கிறார் ராசோ.(RASO).

பறவையையும், மீன்களையும் கண்ட மனிதன் அதனுடைய அழகினை மட்டும் கண்டு வியந்து கடந்து சென்று இருந்தால், இன்று நாம் செல்லாமல் பெரிதினும் பெரிதாக மட்டுமே விமானங்களும், கப்பல்களையும் படைத்தான்.

கடல் கடந்து குடும்பங்களை பிரிந்து வாழும் நாம் அனைவரும் குறைந்தது 2 வருடங்களில் ஒரு முறை நம் குடும்பங்களை சந்திப்போம் என்ற நம்பிக்கையையும், தைரியத்தையும் கொடுப்பது நமக்கு கிடைத்திருக்கும் விமான வசதிகளை பெரிதினும் பெரிதாக கேட்டதனால் மட்டுமே!

கனவு காணுங்கள் ஆனால் கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல உன்னை தூங்கவிடாமல் செய்வதே இலட்சிய கனவு என்றார் ஐயா கலாம் அவர்கள்.


காலம் கடந்தும் ஐயா அப்துல்கலாம் அவருடைய பெயர் என்றும் மறையாதவை. அதற்கு காரணம் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்து இருந்தாலும் அவர் பெரிதினும் பெரிதாக கேட்டதினால்தான் விஞ்ஞானியாகவும் தலைசிறந்த ஜனாதிபதியாகவும் விளங்கினார்.

ஒரு பறவைக்கூட மரக்கிளையில் உட்காரும்போது கிறை முறிந்து விடுமே என்று அஞ்சுவதில்லை, ஏன் தெரியுமா பறவைகள் பெரிதாக நம்பியிருப்பது கிளைகளை அல்ல அதன் சிறகுகளை.

உங்கள் கனவுகள் பெரிதாக இருக்க வேண்டும் எனச்சொல்லும் பாரதி அவை உங்களை சுற்றியிருப்பவர்களின் உரிமைகளுக்கானதாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

பெரிதினும் பெரிது கேள். நீ பெரிதாக கேட்கப்படும் ஒவ்வொன்றும் மற்றவர்களுக்கு தைரியம், நம்பிக்கை, முயற்சியை கொடுத்து உத்வேகப்படுத்தினால் அனைவரும் இணைந்து பலருக்கும் பயன்படும் புதிய முயற்சிகளை பெரிதாக கேட்கலாம்.

- **அரச்சனா வெங்கடேஷ்**




**பொருள்:** தீயவர்களைப் பார்ப்பதும் நமக்குக் கெடுதியே, பயனற்ற அவர் சொல்லைக் கேட்பதுவும் நமக்குக் கெடுதியே, அவர்களைப் பற்றி அடுத்தவர்களிடத்தில் சொல்வதுவும் நமக்குக் கெடுதியே, அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நமக்குக் கெடுதியே.

இதற்கு உதாரணமாக சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். குஜராத்தில் உள்ள மோர்பி பாலம் அருந்து விழுந்தது நம் அனைவருக்கும் தெரிந்து இருக்கும். இதற்கு காரணம் சில தீயவர்களும் அவர்களுடைய செயல்களும் தான்.

**முதல் காரணம்:** சில தீயவர்கள் அந்த பாலத்தின்மேல் இருந்துகொண்டே அந்த பாலத்தை ஆடியது.

**இரண்டாவது காரணம்:** அளவுக்கு அதிகமாக மக்களை பாலத்தின் மேல் போக அனுமதி கொடுத்தது

**மூன்றாவது காரணம்:** தகுதி சான்றிதழ் வாங்காதது.

இதனால் பல அப்பாவி மக்கள் இறந்துவிட்டனர்.

நம் எண்ணங்களும் செயல்களும் மிகவும் வலிமை வாய்ந்தது. நம் எண்ணங்கள் போல தான் நம் நடத்தை இருக்கும், நம் நடத்தை போன்றே தான் நம் வாழ்க்கை இருக்கும். ஆகையால், தீயவர்களை ஒதுங்கி இருப்பது நல்லது. இதை திருவள்ளுவர் அழகாக ஒரு திருக்குறளில் சொல்லி இருப்பார்.


**பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை**

**பெருகலிற் குன்றல் இனிது**

**விளக்கம்:** தீயவர்கள் ஆர்வம் காட்டினாலும் அவர்களுடைய நட்பு வளர்வதை விட குறைவது நல்லது.

நன்றி !!

**ஆஷிகா**
**ஜெய்பிரவீண்குமார்**



என் தலைப்பு கபிலரின் சங்க தமிழ் பாடல். கபிலர் நிறைய சங்க தமிழ் பாடல்கள் பாடி இருக்கிறார். இவர் வேள்பாரியின் நெருங்கிய நண்பர். வேள்பாரி இறந்தபின் அவருடைய மகள்களை பொறுப்பாக பார்த்துக்கிட்டார். இவர் இயற்றிய குறிஞ்சிப் பாட்டு பத்துப்பாட்டில் உள்ளது. கபிலர் இயற்கையை வருணித்து அவருடைய பாட்டில் சேர்த்து உள்ளார். நான் கபிலர் பாடிய புறநானூறு எட்டாம் பாடல் பாடப்போகிறான்.

பாடியவர் : **கபிலர்**

பாடப்பட்டோன் : **சேரமான் கடுங்கோ வாழியாதன்**

திணை : **பாடாண்.**

வையம் காவலர் வழிமொழிந்து ஒழுகப்
போகம் வேண்டிப் பொதுச்சொல் பொறாஅது
இடம் சிறிது என்னும் ஊக்கம் துரப்ப
ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்து அடு தானைச் சேரலாதனை
யாங்கனம் ஒத்தியோ, வீங்குசெலல் மண்டிலம்!
பொழுதுஎன வரைதி; புறக்கொடுத்து இறத்தி;
மாறி வருதி; மலைமறைந்து ஒளித்தி;
அகல்இரு விசும்பி னானும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே.

பொருள்: கபிலர்க்கு முன் வேறு புலவர் கதிரவனோடு சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனை ஒப்பிட்டு பாடியிருப்பார், , இதற்க்கு கபிலர் பதில் சொல்கின்றார்.

எப்படி சேரமானை சூரியனுக்கு ஒப்பிட முடியும். சூரியன் பகலில் மட்டும் வரும். இரவு நிலாவுக்கு விட்டு கொடுத்திடும். இது இல்லாமல் திசை மாறி வரும். மலைக்கு பின்னால் போய் மறையும். அகன்ற வானத்துல கதிர் வீசி ஒளி தரும் ஆனால் அது பகலில் மட்டும்தான். செல்வக் கடுங்கோ வாழியாதன் இந்த உலகத்தில் உள்ள அரசர்கள் எல்லாரும் தன் சொல்லுக்குப் பணிந்து நடக்க வேண்டும் எனக் கருதி, எல்லா அரசர்களும் சமம் என்னும் பொதுச்சொல்லைப் பொறுக்காமல், தன் நாடு சிறியது, அதை பெரியது செய்ய வேண்டும் என்று ஊக்கம் கொண்டு, குறையாத ஈகை கொண்டு, பகைவர்களை போராடி வெற்றி பெரும் படையுடன் இருப்பார். கதிரவன் சேரமானுக்கு இணையானவன் இல்லை என்று இப்பாடலில் கபிலர் கூறுகிறார்.

கபிலர் கூறியது போல் அனைத்து தலைவர்களும் 24 மணி நேரமும் நாட்டு மக்களுக்காக யோசித்து, உழைத்து, நாட்டு மக்களுக்கு நல்லது செய்யணும்.

**ஆர்ணா சம்பத்**

# ஔவையார் அருளிச்செய்த மூதுரை



12-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார் என்ற பெண் புலவர் இயற்றிய ஒரு தமிழ் நீதிநூல் மூதுரை ஆகும். அறக்கருத்துக்கள் கொண்டதால் முதுமை உரை மூதுரை என்று அழைக்கப்படுகிறது. இது வாக்குண்டாம் என்ற கடவுள் வாழ்த்துடன் தொடங்கி 30வெண்பாக்கள் கொண்டது. அவற்றுள்12ம் வெ ண்பாவைப்பற்றிய என் புரிதலை உங்களிடம் பகிர விரும்புகிறேன். இதோ அந்த **பாடல்:**

**அதன் அருகே சிற்றூரல் உண்ணீரும் ஆகிவிடும்.**

அமெரிக்கத்தமிழ் கல்விக்கழகத்தின் நடுவர் உள்ளிட்ட உறுப்பினர் அவருக்கும் என் சிரம் தாழ்ந்த தமிழ் வணக்கம்! இந்தக்கழகம் நடத்தும் தமிழ் செய்யுள் போட்டியில் கலந்துகொள்ள வந்துள்ள என் பெயர் அமிர்தா கார்த்திக். நான் வடகரோலினா மாநிலத்தின் அரசி நகர தமிழ் பள்ளியின் இரண்டாம் நிலை மாணவி. இன்று நான் பேசப்போகும் தலைப்பு - **ஔவையாரின் மூதுரை.**

இதன் பொருள்,

இதன் பொருள், தாழம்பூவின் இதழ்கள் பெரிதாகவும் பார்க்க அழகாகவும் இருக்கும், ஆனாலும் அது வாசம் தருவதில்லை. மாறாக ஒரு சிறிதான மகிழம்பூ தொலைவில் இருந்தே நல்லமணத்தை தருகிறது. அதுபோல கடல் பலமடங்கு பெரிதாக இருந்தாலும் அதன் நீர் உவர்ப்பாக இருப்பதால் நமக்கு குடிக்க பயனில்லாமல் போகிறது. மாறாக அதன் அருகில் தோன்றும் சிறிய ஊற்று பயனுள்ள நல்ல நீரைத் தருகிறது.

**இருக்கவேண்டா** இவ்வாறு ஒவ்வொரு பாடலும் தனிக்கருத்தை வலியுறுத்துகிறது. தமிழுலகம் நம் அனைவருக்கும் தந்த பரிசு ஔவையாரும் அவரது நீதி நூல்களும் ஆகும்.

இறுதியாக நான்

அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தாலும் தமிழ் பற்றிய என் அறிவை வளர்த்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன்

**உடல் சிறியர் என்று**

எனவே நாம் ஒருவரையும் உருவம், நிறம், சிறியவர், பெரியவர் என்று எடை போடக்கூடாது. அவர்களிடம் நமக்குத் தெரியாத நல்ல குணங்கள், திறமைகள் இருக்கக் கூடும். இதையே திருவள்ளுவரும் அவரது 667ம் குறளில் உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்று கூறியிருக்கிறார்.

**கடல் பெரிது மண்ணீரும் ஆகாது**

**செய்யுள் போட்டி - ஔவையாரின் மூதுரை**

**மகிழ் இனிது கந்தம்**

**மடல் பெரிது தாழை**

வாய்ப்பிற்கு நன்றி, வணக்கம்!!

**வாழிய பாரத மணித்திருநாடு!**

**வாழிய செந்தமிழ்**

**வாழ்க நல்தமிழர்**

**அமிர்தா கார்த்திக்**



**வெண்பா : 4**

*அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளாய்*
*நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்.*

**விளக்கம்**

*நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.*

ஹரிணி ஏகப்பன்

# புறநானூறு



புறநானூறு என்பது பல புலவர்களால் பாடப்பெற்ற பாடல்களின் தொகுப்பு. இக்கால கவிதைத்தொகுப்பு போன்றது. புறம் என்னும் காதல் அல்லாத வெளி உலகம் சார்ந்த வீரம், கொடை, போர் மற்றும் நற்குணங்கள் போன்ற பொருட்களால் தொடுக்கப்பட்ட 400 பாடல்களின் தொகுப்பு. இப்பாடல் பாரியின் கொடைத் தன்மையை பற்றி கபிலர் பாடியது. இவர் பாரின் அரசவைப் புலவர் மற்றும் நெருங்கிய நண்பர்.

**திணை:** பாடாண் திணை

**துறை:** இயன் மொழி

**நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்**

**புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை**

**கடவுள் பேணேம் என்னா ஆங்கு**

**மடவர் மெல்லியர்செல்லினும் கடவன்**
**பாரி கைவண் மையே.**

*(புற நானூறு 106)*

**பொருள்:** நல்லது தீயது என்று இரு வகையிலும் சேராத எருக்கம் செடி பூ தான் தன்னிடம் உள்ளது என்று அதை ஒருவன் கடவுளுக்குக் கொடுத்தாலும் கடவுள் அதை விரும்பமாட்டேன் என்று கூறுவதில்லை. அதுபோல அறிவில்லாதவரோ அல்லது அற்ப குணம் உடையவரோ யாராயினும் பாரியிடம் சென்று கொடைகேட்டால் அவர்களுக்கு கொடை வழங்குவதைக் கடமையாகக் கருதுபவன் பாரி.

இந்த உலகில் வாழும் யாருக்கும் கிடைக்காத வரம் நமக்கு உண்டு. அது நம் முன்னோர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று காட்சியாகப் பார்க்கும் வரம். அக்காட்சியை நமக்கு காட்டும் மாயக்கண்ணாடிதான் சங்க இலக்கியங்கள். அந்த சங்க இலக்கியம் என்னும் பெருங்கடலிலிருந்து சிறு துளியாய் கிடைக்கும் புறநானூற்றுப் பாடலின் 106-வது பாடலை காண்போம்.

கொடை என்பது நாம் செய்யும் தானமும் தர்மமுமே. “கொள் என கொடுத்தல் உயர்ந்தன்று; வாங்கிக்கொள் என்று நாமே மனமுவந்து கொடுப்பதே சிறந்தது” என்ற ஓர் புறநானூற்றுப் பாடல் இதை அழகாகக் கூறுகிறது. பாரியின் கொடையை கபிலர் ஏன் அவ்வாறு கூறினார் என்று பார்ப்போம். பாரி ஒரு நாள் அவர்கள் நாட்டில் நகர்வலம் செல்கையில் ஓர் முல்லைக்கொடி தன் அருகே படர ஏதுமில்லாமல் இருப்பதைக் கண்டு தன் தேரையே அந்த முல்லைக்கொடி படர்வதற்காகக் கொடுத்தார். எனவே ”முல்லைக்குத் தேர் கொடுத்த பாரி” என்றும் அழைக்கப்பட்டார். இதனால் கடையேழு வள்ளல்களுள் ஒருவர் ஆனார்.



நம் வாழ்வியலில் இருந்து பிரிக்க முடியாதது தான் தானமும் தர்மமும். இந்த இரண்டுமே அறம் மிகுந்த செயலாக கருதப்படுகின்றன. நாம் இன்று செய்யக்கூடிய தானமும் தர்மமும் நம் தலைமுறையையே காக்கும் என்று நம் முன்னோர்களால் சொல்லப்படுகிறது. இதன் அர்த்தம் பலருக்கும் தெரிவதில்லை.

தானம் என்றால் பலனை எதிர்பார்த்து நாம் செய்வது. தர்மம் என்பது எதையுமே எதிர்பார்க்காமல் பிறருக்கு செய்வது. அதாவது பசியால் வாடும் ஒருவர் தன் பசியை கூறி அதற்கு உணவளித்தால் அது தானம். அதுவே அவன் பசி அறிந்து அவன் கேட்காமலே அவனுக்கு உதவுவது தர்மம். பாரின் கொடையும் அதைப் போன்றதே.

இவ்வாறு நம்மிடம் உள்ள பொருட்களை பிறருக்குக் கொடுப்பதும் தானம் தான். நம்மால் முடிந்த உதவியை பிறருக்குச் செய்வதும்தானம் தான். நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்த தவறுகள் கூட நாம் செய்யும் தானங்கள் மூலம் மன்னிக்கப்படுகின்றன என்று சங்க இலக்கியங்கள் கூறுகிறது. இன்றைய நடைமுறையில் நாம் பலவகையான தானங்களை செய்து வருகிறோம். இரத்த தானம், கண் தானம், உடல் உறுப்பு தானம் போன்ற பலவகையான தானங்கள் இருந்தபோதிலும், சிறந்த தானங்களாக கருதப்படும்

***ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை***

***மாற்றுவார் ஆற்றலின் பின் - (குறள் 225)***

,என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப அன்னதானத்தையும், "அன்னச் சத்திரம் ஆயிரம் அமைத்தலை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதியின் கூற்றுக்கு ஏற்ப கல்வி தானத்தையும் நம்மால் முடிந்த அளவு செய்து நம் அடுத்த தலைமுறையும் நிமிர்ந்து வாழ வழிவகை செய்வோம். எல்லோர வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவோம்.

***நன்றி. வணக்கம்.***

***நிருபா***

***அரசி நகர தமிழ்ப்பள்ளி***



## மூதுரை

வெண்பா : 4

அட்டாலும் பால் சுவையில் குன்றா(து) அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

விளக்கம்

நற்பண்பு இல்லாதோரிடம் நன்கு பழகினாலும் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். நம் நிலை தாழ்ந்தாலும் நற்பண்புள்ளோர் சிறந்தவர்களாகவே பழகுவர். அவர்கள் நட்பு எவ்வளவு காய்ச்சினாலும் சுவை குன்றாத பாலைப் போன்றது. தீயிலிட்டு சுட்டாலும் மேலும் மேலும் வெளுக்கும் சங்கினைப் போன்றது அவர் நட்பு.



# குறுந்தொகை

*"கரும்பு தந்த தீஞ்சாறே, கனி தந்த நறுஞ்சுளையே, கவின் முல்லை*

*அரும்பு தந்த வெண்ணகையே அணிதந்த  செந்தமிழே*

*முத்தமிழே உனக்கு என் முதல் வணக்கம் !*

அயலவர் மண்ணில் அழகு தமிழை போற்றி வளர்க்கும்

அமெரிக்க தமிழ் கல்வி கழகத்தின் ஆன்றோருக்கும் சான்றோருக்கும் என்னைபோன்றோருக்கும்

என் அன்பு வணக்கம் !!

செறுத்த செய்யுள் செய்செந் நாவின்,

வெறுத்த கேள்வி, விளங்குபுகழ்க் கபிலரின்

நல்ல குறுந்தொகையிலே குறிஞ்சித்திணையிலே



ஓர் இனிய சங்கத்தமிழ் பாடலை பாட நிற்பது கலாம் தமிழ்பள்ளியின் ஐந்தாம் நிலை மாணவி நான் உங்கள் சஷ்டிகா.

**நான் பாடப்போகும் செய்யுள் -**

**மாசு அறக் கழீஇய யானை போலப்**
**பெரும் பெயல் உழந்த இரும் பிணர்த் துறுகல்**
**பைதல் ஒரு தலைச் சேக்கும் நாடன்**
**நோய் தந்தனனே தோழி,**
**பசலை ஆர்ந்த நம் குவளை அம் கண்ணே.**

**இந்த பாடலின் பொருள் -**

சுத்தமாக கழுவப்பட்ட யானையைப் போல மழையினால் சுத்தமாக கழுவப்பட்ட சொரசொரப்பான பெரிய பாறையின் அருகில் ஒரு பசுமையான இடத்தில் தலைவனுடன் தலைவி மகிழ்வோடு இருந்தார். இப்போது தலைவர் பிரிந்துசென்று, குவளை மலர் போன்ற தன் அழகிய கண்களில் பசலை நோயை தந்துவிட்டார் என தன் தோழியிடம் கவலையுடன் கூறினாள்

பாடலுக்கும் நம் வாழ்க்கைக்கும் உள்ள உறவு -

தவிர்க்க முடியாத காரணங்களால் இந்தியா சென்ற என் அப்பாவையும் அண்ணனையும் நானும் என் அம்மாவும் பிரிந்து வருந்துகிறோம் .. அனாலும் இன்னும் 2 மாதங்களில் அவர்கள் திரும்பி வந்துவிடுவர் என்ற

தன்னம்பிக்கையோடு வாழ்கிறோம்..

இந்த பாடல் மூலம் நாம் அறிவது என்னவென்றால் - அன்பு இருக்கும் இடத்தில் பிரிவு வரும்போது வருத்தமும் கவலையும் உடன் வந்து சேரும், அதைக்கண்டு துவண்டுபோகாமல் தன்னம்பிக்கையோடு மீண்டுவரவேண்டும் .

**-சஷ்டிகா**



பாடல் :

வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம்
மாமலராள்
நோக்கு உண்டாம் மேனிநுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

விளக்கம் :

பூக்களைக் கொண்டு சிவந்த மேனியுடைய விநாயகரது பாதங்களைத் துதிப்பவர்க்கு வாக்குத் திறமையும், நல்ல மனமும், பெருமலரை உடைய லக்ஷ்மியின் கடாக்ஷமும், நோயற்ற வாழ்வும் கிடைக்கும்

---------------------------------

வெண்பா : 8

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று

விளக்கம்

நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதுவும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதுவும், அவர்களோடு சேர்ந்து இருப்பதுவும் நல்லது.

-ஆனந்த்



# கல்வியின் சிறப்பு - மூதுரை

அனைவருக்கும் வணக்கம். என் பெயர் ஹர்ஷவர்தன் அமிர்த கோபால். அமெரிக்கத் தமிழ் கல்விக் கழக மெய்நிகர் ஆண்டு விழா 2022ல் கல்வியின் சிறப்பை விளக்கும் ஔவையாரின் மூதுரை பாடலை உங்களுடன் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு மனிதனின் வாழ்க்கைக்குப் பெரும் முக்கியமானது கல்வி. கல்விக்கு எல்லையே இல்லை. மனிதன் பிறந்தது முதல் அவன் கற்றுக் கொண்டே தான் இருக்கிறான்.

கல்வியும் ஒரு செல்வமாகவே கருதப்படுகிறது. அது பிறருக்கு கொடுத்தாலும் குறையாது. கல்வியை யாராலும் கைப்பற்றவோ, அழிக்கவோ முடியாது. அழியாச் செல்வமாகிய கல்வியை கசடறக் கற்றவன் எங்கும் எப்போதும் சிறப்பு பெறுவான்.

கல்வியின் சிறப்பையும், கற்றவரின் பெருமையையும் மூதுரை இருபத்தி ஆறில் ஔவையார் எடுத்துரைக்கிறார்.

***மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்***

***மன்னனின் கற்றோன் சிறப்புஉடையன்; மன்னற்குத்***

***தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை; கற்றோற்குச்***

***சென்றஇடம் எல்லாம் சிறப்பு (மூதுரை:26)***

ஒரு நாடாளும் அரசனையும் ஒரு கற்றுணர்ந்த சான்றோனையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஒரு அரசனை விட சான்றோன் சிறப்புமிக்கவன். ஒரு அரசனுக்கு கல்வியறிவு இல்லாமல் இருந்தால் அவனுக்குப் பெருமை கிடையாது. ஆனால் கற்றோருக்கு அரசனாக இல்லை என்றாலும் அவருக்குப் பெருமை வந்து சேரும். ஒரு மன்னனுக்கு தன் நாட்டில் மட்டும்தான் சிறப்பு. ஆனால் கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

மக்களாட்சி நடைபெறும் தற்காலத்திலும் இப்பாடல் பொருந்தும். அதிகாரமும் செல்வமும் நிறைந்த ஆள்வோரை விடவும் தொழில்நுட்பம் மூலம் கல்வியைப் பகிரும் கற்றவரின் சிறப்பு பெரிதாகும்.

நாமும் கற்போம்! கற்றதைப் பகிர்வோம்!

வெல்க தமிழ்!

நன்றி! வணக்கம்!

ஹர்ஷவர்தன் அமிர்த கோபால்

# ஒற்றுமையே பலம்

ஒரு குளத்துல ஒரு வயசான கொக்கு சோகமா நின்னுட்டு இருந்ததாம். அதை பார்த்துட்டு இருந்த மீன்கள் எல்லாம் 'கொக்கே கொக்கே ஏன் சோகமா இருக்க' அப்படின்னு கேட்டுச்சாம். அதுக்கு அந்த கொக்கு, 'இந்த குளத்தை மண்ணு போட்டு மூட போறாங்க. நான் வேற குளத்துல போய் மீன் புடிச்சு சாப்பிட்டுக்குவேன். எனக்கு உங்களை நினைச்சாதான் கவலையா இருக்கு' அப்படின்னு சொல்லுச்சாம். நான்வேணா ஒரு யோசனை சொல்லவா உங்களை பக்கத்து குளத்தில் போய் விட்டுவிடவா, அப்படின்னு கேட்டுச்சாம். அந்த மீன்களும் சரின்னு சொல்லிடுச்சாம். கொக்கு, ஒவ்வொரு மீனா எடுத்துட்டு பறந்து போய், குளத்தில் விடாமல் பாறை மேல வச்சு சாப்பிட்டுருச்சாம். இதை பார்த்துட்டு இருந்த நரி, கொக்கே கொக்கே நீ ஏன் பாறைக்கும் குளத்துக்கும் பறந்து பறந்து கஷ்டப்படுற, எனக்கு ஒரு ரகசியமான இடம் தெரியும், அங்க மீன்கள் தானாவே வந்து கொட்டும், நீ உட்கார்ந்த இடத்துல இருந்தே கஷ்டப்படாம மீன்களை சாப்பிடலாம் அப்படின்னு சொல்லுச்சாம். இதை கேட்ட கொக்கு, இது நல்ல யோசனையா தெரியுதே அப்படின்னு நரி பின்னாடியே போச்சாம். அங்க போய் பார்த்தா மீன்களே இல்லையாம். அப்பதான் கொக்குக்கு தெரிஞ்சு தான், நாம மீன்களை ஏமாத்தி சாப்பிட்ட மாதிரி இந்த நரி நம்மள ஏமாத்தி சாப்பிட போகுது. நாம யாருக்காவது கெடுதல் செய்தால், நமக்கும் கெடுதல் தான் வரும். இதைத்தான் வள்ளுவர்,

**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்ன**
**பிற்பகல் தாமே வரும்.**

அப்படின்னு சொல்லி இருக்காங்க.

நன்றி



# கரடியும் தேனிக்களும்



ஒரு அழகான காட்டில் ஒரு பயங்கரமான கரடி இருந்ததாம்.

ஒரு நாள், அந்த கரடிக்கு ரொம்ப பசிச்சுதாம். உணவுக்காக தேடிக்கொண்டே இருந்துதாம்.

வழியில், ஒரு மரத்தின் மேல், தேன்கூட்டை கண்டதாம். அதை களைத்து, தேனைக் குடிக்கலாம் என்று கரடி யோசிதுதாம். அந்த சமயத்தில், ஒரு தேனீ வந்ததாம். கரடியை பார்த்து,

"கரடி அய்யா, கரடி அய்யா, நாங்கள் வாழும் கூட்டை கலைக்காதீர்" என்று கெஞ்சியதாம்.

கரடிக்கு கோவம் வந்து,

"கூட்டை கலைபேன், தேனை குடிப்பேன். உன்னால் என்ன செய்ய முடியும்? நான் உன்னை விட பலசாலி." என்று கூறியதாம்.

தேனீ பயந்து, கூட்டுக்குள் சென்று, நண்பர்கள் இடம் நடந்ததை கூறித்தாம்.

இதை கேட்ட ராஜமாதா தேனீ சிரிச்சதாம்.

"பலமா, புத்தியா என்று காட்டுவோமா?

ஒன்று கூடி செல்வோம், வெல்வோம்"

என்று சொல்லி, தேன்கூட்டுக்கு வெளியே ஒன்றாக சென்று கரடியை தாக்கினார்கள்.

கூடி வந்த தேனீர்களை பார்த்து, கரடி பயந்து ஓடிவிட்டதாம்.

இந்த கதையின் நீதி: ஒற்றுமையே பலம்

# காக்கா முட்டை



ஒரு ஊருல அம்மா காக்கா, அப்பா காக்கா இருந்தது. அது பெரிய மரத்துல கூடுகட்டி முட்டை போட்டது. அந்த மரத்துக்கு பக்கத்துல ஒரு பாம்பு புத்து இருந்தது. அந்த பாம்பு காகாவோட முட்டைய சாப்டுட்டே இருந்தது, அதுனால காக்கைகள் சோகமா இருந்தது. அப்போ அந்த வழியிலே ஒரு நரி வந்தது. அந்த நரி "ஏன் சோகமா இருக்கீங்க, என்ன ஆச்சு?"னு கேட்டது. அம்மா காக்கா சொன்னது "மரத்து பக்கத்துல இருக்கிற பாம்பு எங்க முட்டைய சாப்டுட்டே இருக்கு, அதனால வேற மரத்துக்கு போலாமான்னு யோசிக்கிறோம்" னு சொன்னது. நரி ஒரு யோசனை குடுத்தது - "உங்க மரத்து பக்கம் இருக்கற குலத்துக்கு ராணி எல்லா நாளும் குளிக்க வருவாங்க. அவங்க முத்து மாலையை கழட்டி வைப்பாங்க, அந்த முத்து மாலைய பாம்பு புத்துல போட்டா உங்க பிரச்சனை தீர்த்திடும்" னு சொன்னது .

மறுநாள் காலையில ராணி குளிக்கும் போது முத்து மாலையை கழட்டி வெச்சாங்க, அப்போ காக்கா அந்த முத்து மாலையை கவ்வி கிட்டு பறந்து போனது. அப்போ ராணி கத்தினாங்க "வீரர்களே! எப்படியாச்சு என்னுடைய முத்து மாலைய கொண்டுவாங்க"னு கத்தினாக. வீரர்கள் காக்காவை துரத்திகிட்டே போனாக. காக்கா அந்த முத்து மாலை பாம்பு புத்துல போட்டது. வீரர்கள் பாம்பு புத்த இடிக்க ஆரம்பிச்சாங்க. அப்போ பாம்பு வெளியே வந்தது, ஒரு வீரன் அந்த பாம்பை வெட்டினார். இதெல்லாம் அம்மா காக்கா அப்பா காக்கா மரத்துல இருந்து பாத்துகிட்டே இருந்தது - "அப்பாடா ! பாம்பும் செத்துப்போச்சு, புத்தும் இடுச்சாச்சு, நமக்கு இனிமேல் தொல்லையே இல்லைனு சொன்னது.

கொஞ்சநாள் கழுச்சு காக்கா முட்டை போட்டு குஞ்சு பொரிச்சிச்சு. அவுங்க எல்லோரும் சந்தோசமா நரிக்கு பொய் நன்றி சொன்னாங்க.

இந்த கதையோட நீதி : "விதியை மதியால் வெல்லலாம்" -